# வணிகமஞ்சரி

ஜூன் / ஜூலை / ஆகஸ்ட் 1987 JUNE / JULY / AUGUST 1987

SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

வணிகப் புதினங்களையும் கருத்துக்களையும் தாங்கி வெளிவரும் திங்கள் இதழ்

வணிக அறிவியல் நிறுவன வெளியீடு


- வணிகச் செய்திகள்
- தொழிலாட்சியும் அதன் நோக்கங்களும்
- மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகங்கள்
- பொதுப் படுகடன்
- காசோலைகள் தீர்க்கப்படும் நடைமுறை


# VANIHA MANCHARY

MONTHLY DIGEST OF BUSINESS NEWS & VIEWS

**Published by Business Studies Institute**

ரூபா 5/-

## 'MANCHARI' SHOPPING WINDOW

# WHERE? AND WHICH?

**GENERAL EDUCATION**
**Private Tutors.**

AVON TUTORS
Jaffna Road
Manipay.

REALS ACADEMY
Manipay.

NAVALAR EDUCATION CENTRE
Sithankerny.

---

**HOME SCIENCE, PROFESSIONAL COURSES**
BRIGHTON ACADEMY
Manipay.

---

**MEDICAL PRACTITIONERS**
**Sidha Aurvedic & Homeopathy**

JEEVARADCHAMIRTHA DISPENSARY
Kaddudai Junction
Manipay.

---

**DEALERS IN FORMICA, GLASS; & PICTURE FRAMERS**
CIRRAEYAS
K. K. S. Road
Thavady Junction
Kondavil.

---

**PHOTOGRAPHY & STUDIO**
SHIVA STUDIO
Jaffna Road
Manipay.

RAJAH STUDIO
Market View
Manipay.

GANESH ART STUDIO
K. K. S. Road
Kokkuvil.

---

**VIDEO FILMING, RECORDING & AUDIO DUBBING**
EXPO VIDEO COMPLEX
No. 7, K. K. S. Road
Kondavil.

# வணிக மஞ்சரி

மலர்1 ஜூன்/ஜூலை/ஆகஸ்ட் 87 இதழ்5

வணிகச் செய்திகளையும் கருத்துக்களையும் தாங்கிவரும் திங்கள் இதழ்.

வெளியீடு:

வணிக அறிவியல் நிறுவனம்,
198, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஆட்சி உறுப்பினர்:

★ இ. நி. வரேந்திரன்
பட்டயக் கணக்கறிஞர்

★ வே அரியரத்தினம்
பட்டயக் கணக்கறிஞர்

★ சி இராஜலிங்கம்
சந்தைப்படுத்தல் ஆலோசகர்

★ வை. ச. செந்தில்நாதன்
சட்டத்தரணி

★ சி. நா. ராதாகிருஷ்ணன்
பிரதேச முகாமையாளர்
லங்கா மில்க் பூட்ஸ் லிமிட்

★ மு. ஜெகதீசன்
கைத்தொழிலதிபர்

★ ந. பேரின்பநாதன்
பல்கலைக்கழக விரிவுரையாளர்

★ மா. சின்னத்தம்பி
வலய ஆசிரிய ஆலோசகர்

★ சி யோகேஸ்வரன்
ஆசிரியர்

★ க. நந்தகுமார்
முகாமைத்துவ கணக்கறிஞர்

★ ஜெ. இராஜசிங்கம்
சந்தைப்படுத்தல் முகவர்

ஆசிரியர்:

கு. கல்வளை சேயோன்

மாணவர் பதிப்பு:

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ. 5/- |
| ஆண்டுச் சந்தா | ரூ. 55/- |
| அரையாண்டுச் சந்தா | ரூ. 30/- |

நூலகப் பதிப்பு:

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ. 10/- |
| ஆண்டுச் சந்தா | ரூ. 115/- |

அச்சுப்பதிவு:

முரசொலி அழுத்தகம்
ஆர். ஜி. பில்டிங்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


# சிந்தனை

இன்று வணிகத்துறை ஆர்வமிக்க கற்கைநெறியாக அமைந்துள்ளது. எனினும் மூன்று தசாப்தங்களின் முன்னர் வணிகத் துறைப் பாடங்களை க. பொ. த. (சா/த) பரீட்சை வரையுமே கற்கக்கூடியதாக இருந்தது. பல்கலைக்கழக மட்டத்திலும், தொழினுட்பக் கல்லூரி மட்டத்திலும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மட்டத்திலும் பல்வேறு பரீட்சைகட்கு தமிழ்மொழி மூலம் வர்த்தக பாடங்களை இடம்பெறச் செய்த பெருமைக்கு உரியவர்களில் முதன்மையானவர் பளை மகாவித்தியாலயத்தில் பயிற்றுவிக்கும் ஆசிரியர் திரு. மா. புவனேந்திரன் ஆவார். அகில இலங்கை வர்த்தகக் கல்வி மன்றம் என்னும் நிறுவனத்தைத் தோற்றுவித்து அதனூடாக அவர் மேற்கொண்ட அயராத முயற்சியின் விளைவாகவே வர்த்தக நெறிப் பாடங்கள் இன்றுள்ள உன்னத நிலையை அடையக்கூடியதாக இருந்தது என்றால் மிகையாகாது.

அவரது ஆர்வம் வர்த்தக கல்வியில் மட்டுமன்றி சாரணியத் துறையிலும் விரவி அத்துறையும் அவரது அயராத பணியை பெற்றுக் கொண்டது. திரு. மா. புவனேந்திரனின் சேவை நலம் பாராட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. அவர் நீடு வாழ்ந்து வர்த்தக கல்விக்கும் ஏனைய துறைகட்கும் மேலும் தீவிரமாகப் பணியாற்றவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

★ ★ ★

மாதந்தோறும் தவறாது வெளிவந்த "வணிக மஞ்சரி" யின் இரு இதழ்கள் அண்மைக்கால நிகழ்வுகளின் விளைவாக வெளிவராமையை வருத்தத்துடன் குறித்துக் கொள்கின்றோம். உங்கள் கரங்களில் தவழும் இவ்விதழ் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய மூன்று மாதங்கட்கும் பொதுவாக வெளியிடப்படுகின்றது. இனி மாதந்தோறும் தவறாது உரிய காலத்தில் "வணிக மஞ்சரி" இதழ்களை வெளியிட ஆவன செய்வோம்.

★ ★ ★

எமது வாசகருட் பலர் தற்போது நடைபெறும் க. பொ. த (உ/த) பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். அவர்களது கல்வி முயற்சிக்கு எம்மாலான ஊக்கத்தை நாம் வழங்கிவந்துள்ளோம். அவர்கள் பரீட்சையில் சிறப்பாகத் தேறவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

# சில முக்கிய குறிகாட்டிகள்

## வெளிநாட்டு வர்த்தகம்

| | 1985 | 1986 |
|---|---|---|
| ஏற்றுமதி | | |
| விவசாயப் பொருட்கள் | 19,026 | 15,764 |
| | (52 5) | (46.3) |
| கைத்தொழிற் பொருட்கள் | 14,295 | 15,878 |
| | (39.5) | (46 6) |
| கனிப் பொருட்கள் | 864 | 1,182 |
| | (2 4) | (3.4) |
| ஏனையவை | 2,022 | 1.249 |
| | (5 6) | (3 7) |
| மொத்தம் | 36,207 | 34,073 |
| | (100.0) | (100 0) |
| இறக்குமதி | | |
| நுகர் பொருட்கள் | 14,261 | 18,609 |
| | (26.4) | (34.1) |
| இடைநிலைப் பொருட்கள் | 25 532 | 22,314 |
| | (47 2) | (40 9) |
| முதலீட்டுப் பொருட்கள் | 10,387 | 10,556 |
| | (19 2) | (19.3) |
| ஏனையவை | 3 869 | 3.130 |
| | (7.2) | (5 7) |
| மொத்தம் | 54,049 | 54,609 |
| | (100 0) | (100.0) |

ரூபாய் — மில்லியன்கள்

அடைப்புக் குறிக்குள் விகிதங்கள்

## பணநிரம்பல்

ரூ. மி.

| | 1985 | 1986 |
|---|---|---|
| தாள், உலோக நாணயங்கள் | 9,815 | 11 570 |
| கேள்வி வைப்புகள் | 8 946 | 9,609 |
| ஒடுங்கிய பணநிரம்பல் (M 1) | 18 761 | 21,179 |
| தவணை சேமிப்பு வைப்புகள் | 29,648 | 29,681 |
| விரிந்த பணநிரம்பல் (M 2) | 48,409 | 50 860 |
| ஒடுங்கிய பண நிரம்பலின் விகிதமாக கேள்வி வைப்புகள் | 47.7% | 45 4% |

## பொதுப் படுகடன்

ரூ. மி.

| உள் நாட்டுப் படுகடன் | 1986 |
|---|---|
| வங்கித் துறை | 27,778 |
| வங்கியற்ற துறை | 42,159 |
| ஏனைய | 148 |
| மொத்தம் | 70,085 |
| (-) கடன் ஆழ்நிதி | (6,429) |
| நிகரக் கடன் | 63,556 |
| வெளிநாட்டுப் படுகடன் | |
| சர்வதேச நிறுவனங்கள் | 23.114 |
| உதவி வழங்கும் நாடுகளின் கூட்டு | 50 685 |
| ஏனையோர் | 12.409 |
| மொத்தம் | 86.208 |

## விலைகள்

| | டிச 1986 | பெப் 1987 |
|---|---|---|
| கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (1952=100) | 627.5 | 632.1 |
| மொத்த விலைச்சுட்டெண் | 360.6 | — |

சிறப்புக் கட்டுரை

# தொழிலாட்சியும் அதன் நோக்கங்களும்

## BUSINESS AND ITS OBJECTIVES

சி. நா. ராதாகிருஷ்ணன், B. Com., (Cey.)
சந்தைப் படுத்தல் பிரிவு,
லங்கா மில்க் பூட்ஸ் (சி. டபிள்யூ. இ) லிமிட்.

வணிகத் துறையானது கொள்ளல் கொடுத்தல், காப்புறுதி, போக்குவரத்து, வங்கித் தொழில் போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாகும். வணிகத்தில் வியாபாரம் ஓர் அம்சம். அவ்வியாபாரம் கொள்ளல் கொடுத்தலைக் குறிக்கின்றது. ஆனால் தொழிலாட்சி என்ற பதம் மூலம் நாம் நிறுவனங்கள் அமைக்கப்பட்டு அவை தொழில் முயற்சியில் ஈடுபடுவதைக் கருதுகின்றோம். அத்தொழில் வியாபாரமாகவோ, காப்புறுதியாகவோ வங்கித் தொழிலாகவோ, ஹோட்டல் துறையாகவோ இருக்கலாம். இக்கட்டுரையில் தொழிலாட்சி எவ்வாறு வரைவிலக்கணப் படுத்தப்படுகின்றது, அதன் தொழிற்பாடுகள் என்பவற்றை உயர் முகாமைத்துவ கண்ணோட்டத்தில் அணுகுவதுடன் தொழிலாட்சியின் நோக்கத்தினை வரைவிலக்கணப்படுத்துவதில் அறிஞர்களின்கருத்துக்களும் நோக்கப்படுகின்றன.

### தொழிலாட்சியின் வரைவிலக்கணம்:

ஒவ்வொரு மனிதனும் ஒரு நாளைக் கழிக்கின்ற போது பல்வேறு தொழிலாட்சிகளின் நடவடிக்கைகளினால் எழும் நலன்களைப் பெறுகின்றான் அவன் காலை வேளையில், அக்காலைப் பொழுதின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய பொருட்களை விற்பனை செய்யும் விற்பனை நிலையத்தில்(கடையில்) வாங்கக் கூடும். அவ் விற்பனை நிலையம் ஒரு தொழிலாட்சி அமைப்பு. வேலைத்தலத்திற்கு போக்குவரத்து சபையின் பஸ் வண்டியில் பிரயாணம் செய்யின் அச்சபையும் ஒரு தொழிலாட்சி நிறுவனமே. அவன் ஒரு வங்கியில் வேலை பார்ப்பவன் எனின் அதுவும் ஒரு தொழிலாட்சி நிறுவனம். வேலை நேரத்தின் பின்னர் மாலைப் பொழுதைக் கழிக்க சினிமா கொட்டகையினுள் நுழைவானாயின் அங்கும் அவன் தொழிலாட்சி நிறுவனம் ஒன்றின் நன்மையைப் பெறுகின்றான். எனவே எம்மைச் சூழ தொழிலாட்சி அமைப்புக்கள் உள்ளதையும் அவற்றில் நாம் தங்கியிருப்பதையும் காண்கிறோம். தொழிலாட்சி அமைப்புக்கள் இயற்கையினால் உருவாக்கப்படவில்லை. இவற்றை உருவாக்குவதும் முகாமை செய்வதும் மக்களே. இவை பொருளாதார சக்திகளால் முகாமை செய்யப்படுவதில்லை; இவை மனித சமுதாயத்தின் நன்மைக்காக உருவாக்கப்பட்டவை; எனவே 'தொழிலாட்சி ஒரு மனித ஒழுங்கமைப்பு (Human Organization) எனப்படுகிறது.

தொழிலாட்சியை வரைவிலக்கணப்படுத்தும் முகாமை எழுத்தாளர் திரு. பீற்றர் எவ். றக்கர் (Peter F. Drucker) 'ஒரு உற்பத்தியை அல்லது ஒரு சேவையை ஏதாவதொரு ஒழுங்கமைப்பு தனது சந்தைப்படுத்தல் மூலமாக நிறைவேற்றுமாக இருந்தால் அது ஒரு தொழிலாட்சி என அழைக்கப்படலாம்' என்றும் 'நிறுவனத்திற்கு வெளியேயுள்ள வளத்தினை குறிப்பாக அறிவினை வெளியேயுள்ள பெறுபேறாக குறிப்பாக பொருளாதாரப் பெறுமதியாக மாற்றுகின்ற செயற்பாடு என வரைவிலக்கணப் படுத்தலாம்' என்றும் இருவேறு நூல்களில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவரால் மேலும் தரப்பட்டுள்ள இவை இரண்டினையும் இணைத்த வரைவிலக்கணமான "தொழிலாட்சி என்பது ஒருவளத்தினை தீர்க்கமான அறிவினால் மாற்றி சந்தையில் பொருளாதாரப் பெறுமதியாக அளிக்கின்ற செயற்பாட்டினைக் குறிக்கும்" என்பது மிகப் பொருத்தமானதாகும். இங்கு தொழிலாட்சியின் தொழிற்பாட்டின் அடிப்படையில் இவ்வரைவிலக்கணங்கள் அமைந்திருப்பதைக் காணலாம். இங்கு நிறுவனமொன்று ஒரு பொருளாதாரப் பெறுமதியினை அதன் வாடிக்கையாளனிற்கு பொருளாக அல்லது சேவையாக அது கொண்டுள்ள அறிவின் அடிப்படையில் அமைத்துத் தருகின்றது. வேறுவார்த்தையில் கூறின், தொழிலாட்சிகள் வாடிக்கையாளனிற்கு திருப்தியை பொருட்கள், சேவைகள் என்ற வாகனங்கள் மூலம் அளிக்கின்றன எனலாம்.

தொழிலாட்சிகள், நாம் முன்னர் கண்டதுபோல் கொள்ளல் கொடுத்தலில், காப்புறுதியில், போக்குவரத்தில் வேறும் பல்வேறு தொழில்களில் உள்ளவையாக இருக்கலாம். மேலும் அவற்றின் பருமன், கட்டமைப்பு, உற்பத்திகள், தொழில்நுட்பம், சந்தைகள்,

முகாமைத்துவ ஆற்றல் என்பன வேறுபட்டிருப்பினும் அவை தொழிலாட்சி என்ற வகையில் ஒத்த பண்புகளைக் கொண்டவையாகும்.

உண்மையில் தொழிலாட்சி ஒரு பொருளாதார முறையாகும். (Economic System) அதனால் எவ்வளவு பொருளாதார நிறைவினை அவை அளிக்கின்றன என்பது கவனிக்கப்படவேண்டியது. ஒரு தொழிலாட்சியின் முகாமையாளன் அத் தொழிலாட்சி நிறுவனத்தை உண்மையில் முற்றாக விளங்கிக்கொள்ள, அதன் முழு அம்சங்களையும் நோக்கவேண்டியவனாகின்றான். அதன் வளங்களை, அதன் தாக்கங்களை முழுமையாக நோக்குவதுடன் அதன் பொருட்களை சேவைகளின் ஒதுக்கீடு, சந்தை, வாடிக்கையாளன், பங்கீட்டு வழிகள் (Channells of Distribution) என்பவற்றையும் நோக்கவேண்டும். தொழிலாட்சியின் முழுத் தோற்றத்தையும் ஒரு பொருளாதார அமைப்பாக காணும்போதே அது பற்றிய உண்மையான அறிவினைப் பெறமுடியும்.

## தொழிலாட்சியின வருமானமும்

### வளங்களும

தொழிலாட்சி நிறுவனம்மொன்று கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுகின்றது. இக் கொடுக்கல் வாங்கல் மூலம் வருமானத்தை அது ஈட்டும். அந் நிறுவனம் பொருட்களை சேவைகளை உருவாக்குவதற்காக செலவினைச் செய்திருக்கும். இப் பொருட்கள் சேவைகளை விற்பனை செய்யும்போது அது விற்பனைப் புரள்வைப் பெறுகின்றது இவ்விற்பனைப் புரள்வில குறித்த பொருட்களின சேவைகளின மொத்தக் கிரயத்தை கழித்தால் அதன் நிகரவருமானத்தைக கண்டு கொள்ளலாம்.

தொழிலாட்சிகள் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள வளங்களைக் கொண்டிருக்க வேண்டும. அவ் வளங்களை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர்

1. அறிவு வளங்கள் அல்லது மனிதன்.
2. பௌதீக வளங்கள்
3. நாணய ரீதியான வளங்கள்.

அறிவு வளங்கள் பயிற்றப்பட்ட மக்களைக் குறிக்க பௌதீக வளங்கள் அந்நிறுவனத்தில் உள்ள யந்திரம் இருப்பு, பொறுத்தொகுதிகள் போன்றவற்றைக் குறிக்கின்றது. நாணயரீதியான வளங்கள் என்பது பணம், கடன்கள் என்பனவற்றைக் குறிக்கும். இவ்வளங்கள் யாவும் பயன்பாடில்லா தொழியக்கூடியவை. மனிதன் முதுமை அடைகின்றான். யந்திரங்கள் தேய்வடையக் கூடியவை. நாணயம் முடிவடையக் கூடியது. எனவே இவற்றை பயன்படுத்தவும் ஈடு செய்யவும் வழிகளையும் தொழிலாட்சி கொண்டிருத்தல் வேண்டும். இங்குதான் முகாமையின் செயல்திறன் அவசியமாகின்றது.

## தொழிலாட்சியின் தொழிற்பாடுகள்

தொழிலாட்சி நிறுவனம் ஒன்றின் முக்கியதொழிற்பாடுகளாக இரு அம்சங்கள் குறிக்கப்படுகின்றன. அவை.

1. சந்தைப்படுத்தல் (Marketing)
2. புதுமையுருவாக்கம் ( Innovation)

தொழிலாட்சியின் தொழிற்பாடுகள் வேறு வார்த்தைகளில் குறிப்பிடப்படினும் அடிப்படையில் இவை இரண்டும் பற்றியே அவை பேசுவதாக இருக்கும்.

## சந்தைப் படுத்தல்

சந்தைப்படுத்தல் தொழிலாட்சியின் சிறப்புத் தொழிற்பாடு. இத் தொழிற்பாட்டின் அடிப்படையிலேயே தொழிலாட்சி பற்றிய முதல் வரைவிலக்கணம் தரப்பட்டுள்ளது. சந்தைப்படுத்தல் என்றால் என்ன என்பது பற்றி பல்வேறு கால கட்டத்தில் பல்வேறு பகுதியினர் பல்வேறு வரைவிலக்கணங்களைத் தந்துள்ளனர். அண்மையில் அமெரிக்க சந்தைப்படுத்தல் நிறுவனம் ஒரு முகாமைத்துவக் கண்ணோட்டத்தில் "சந்தைப்படுத்தல் என்பது பொருட்கள் சேவைகள் உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோரிற்கு அல்லது பயன்படுத்துவோனுக்கு பாய்வதை நெறிப்படுத்துகின்ற தொழிலாட்சியின் நடவடிக்கைகளின் செயற்பாடாகும்" என வரைவிலக்கணம் செய்தது. ஆனால் சந்தைப்படுத்தலின் பரப்பினை மேலும் விஸ்தரிக்கும் புதிய வரைவிலக்கணமாக "சந்தைப்படுத்தல் மனித தேவைகளை திருப்திப் படுத்தும் நோக்கத்திற்காக தனிப்பட்டவர்களாலும் ஒழுங்கமைப்புக்களாலும் செய்யப்படும் பரிமாற்றம் சம்பந்தமான நடவடிக்கைகளாகும்" (Enis-1977) என்பது அமைந்துள்ளது. எனவே இவ்வரைவிலக்கணங்கள் மூலம் தொழிலாட்சிஎன்பது ஒரு திருப்திப்படுத்துகின்ற அமைப்பு முறையாகக் காணப்படுவது தெளிவாகின்றது.

தற்காலத்தில் தொழிலாட்சி நிறுவனமொன்றில் அதன் செயற்பாட்டின் ஆரம்பமாக உற்பத்தியாளனிற்குப் பதிலாக சந்தைப்படுத்துவோனே முன் நிற்கிறான். சந்தைப்படுத்தற் கருதுகோள் ஒரு நிறுவனத்தில் சந்தைப்படுத்துபவனை முதன்மையாகக் கொண்டு அவனிலிருந்தே அத்தொழிலாட்சியின் சகல அம்சங்களும் ஆரம்பிப்பதாகவும் சந்தைப்படுத்தலே அந்நிறுவனத்தினை நெறிப்படுத்தும் அம்சமாக அமைவதையும் குறிக்கின்றது. இதனால் தொழிலாட்சியின் நோக்கமும் தூண்டுகையும் இலாபமே என்பது நீக்கப்படுவதுடன் இதிலிருந்து 'நுகர்வோனே அரசன்' 'உமக்காகவே நாம் யாவும் செய்கிறோம்' என்ற கூற்றுக்களும் எழுகின்றன. வாடிக்கையாளர் நிறுவனத்திற்கு வெளியே யிருப்பினும் அவர்களே நிறுவனத்தின் வெற்றியை

யும் தோல்வியையும் தீர்மானிக்கின்றனர். எனவே தான் வாடிக்கையாளனை உருவாக்குவதே தொழிலாட்சியின் நோக்கம் எனப்படுகிறது. தொழிலாட்சியை முகாமை செய்பவன் சந்தைப்படுத்தலின் உண்மைத் தன்மைகள் சிலவற்றை எதிர்நோக்க வேண்டியவனாக இருக்கின்றான். இவ்வகையில் ஒரு நிறுவனத்தின் சந்தைப்படுத்தற் தொழிற்பாடுகளை அவதானித்தல் அவசியமாகின்றது. இத் தொழிற்பாடுகளை ஏழுகூறுகளாக நோக்கலாம்.

1. சந்தை மாதிரியை வடிவமைத்தல் (Market Delineation)
2. கொள்வனவுத் தூண்டுகை (Purchasing Motivation)
3. உற்பத்தியை சீராக்கல் (Product Adjustmeut)
4. பௌதிக பங்கீடு (Physical Distribution)
5. தொடர்புறல் (Communication)
6. கொடுக்கல் வாங்கல் (Transaction)
7. கொடுக்கல் வாங்கலின் பின்னைய சேவை (Post Transaction)

சந்தை மாதிரியை வடிவமைத்தல் என்பது உள்ளார்ந்த சந்தையை விபரமாக வரை விலக்கணப்படுத்தல் அல்லது விபரிக்கும் செயற்பாட்டைக் குறிக்கும் இங்கு வாடிக்கையாளனை விளங்கிக் கொள்கின்ற ஒரு நிலைப்பாட்டைக் காணக்கூடியதாக இருக்கின்றனது. யார் வாங்குவார்கள்; அவர்கள் எங்கிருக்கிறார்கள்; எப்பொழுது வாங்குவார்கள்; அவர்கள் அடிக்கடி வாங்குவார்களா; எவ்வளவு தொகையை வாங்குவார்கள் என்பன போன்ற வினாக்கள் இங்கு எழுப்பப்படுகின்றன. எனவே சந்தை மாதிரியை வடிவமைத்தல் என்பது உள்ளார்ந்த வாடிக்கையாளர்களையும் அவர்களின் குணம்சங்களையும் அறிவதை நிர்ணயிக்கின்ற செயற்பாடாகும்.

சந்தை மாதிரியை வடிவமைத்தலுடன் தொடர்புடையதாக தொழிலாட்சியின் எண்ணக்கரு (Idea) அமைந்திருக்கின்றது. தொழிலாட்சி நிறுவனம் ஒன்று நாம் எத்தொழிலாட்சியில் (Business) ஈடுபடுகின்றோம் என்பதன் மூலம் இது வெளிப்படுத்தப் படுகின்றது. தொழிலாட்சியின் வளர்ச்சியையும் மாற்றத்தினையும் உள்ளடக்கும் வகையில் தொழிலாட்சி தனது எண்ணக் கருவின் வரைவிலக்கணத்தை அகன்றதாக அமைத்துக் கொள்ளல் வேண்டும். இல்லாவிடில் அது தோல்வியை தழுவவும் கூடும். தியடோர் லிவிட் (Theodore Levitt)என்பவர் தனது (Marketing Myopia) என்ற கட்டுரையில் இதற்குச் சிறந்த உதாரணங்களை எடுத்துக் காட்டுகின்றார் "ரெயில்சேவைத்தொழில், இன்று தொல்லையில் இருப்பதற்குக் காரணம் அத்தேவை (போக்குவரத்து) ஏனையவற்றால்(கார், டிறக்) நிரப்பப் பட்டமையல்ல. ஆனால் ரெயில் சேவைத்துறையில் உள்ளோராலேயே அவை நிரப்பப்படாமையேயாகும். அவர்கள் தம்மைப் போக்குவரத்துத் தொழிலாட்சியில் இருப்பவர்கள் என்று கருதாமல் ரெயில்சேவைத் தொழிலாட்சியிலிருப்பவர்கள் என்று கருதிக் கொண்டனர்! ஹெலிவூட்டில் எல்லாத் திரைப்படக் கம்பனிகளும் தொலைக்காட்சி ஊடுருவலால் தொல்லையில் மாட்டிக் கொண்டன. ஆனால் அது அவர்களின் தவறான வரைவிலக்கணப் படுத்தலின் விளைவாகும். அவை தாம் திரைப்படத் தொழிலாட்சியில் இருப்பவர்கள் என்று கருதிக்கொண்டனர். ஆனால் உண்மையில் அவர்கள் பொழுது போக்குத் தொழிலாட்சியில் ஈடுபட்டிருந்தனர். இத்தோல்வி எற்பட்டமை ரெயில்சேவையினரைப் போன்று ஹொலிவூட்டும் தனது தொழிலாட்சியைத் தவறாக வரைவிலக்கணப்படுத்திக் கொண்டமையினாலாகும்.

கொள்வனவுத் தூண்டுகை என்பது கொள்வனவு நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் நேரடி அல்லது மறைமுக காரணிகளை மதிப்பீடு செய்வதாகும். ஏன் நுகர்வோர்கள் கொள்வனவை மேற்கொள்கிறார்கள் என்பதுடன் பரிமாற்ற நடத்தையைத் தூண்டுகின்ற காரணிகளை விளங்கிக் கொள்ளல் தொழிலாட்சி நிறுவனம் ஒன்றிற்கு கடமையாகும்.

உற்பத்தியைச் சீராக்கல் என்பது அதிக திருப்தியை அளிக்கும் வண்ணம் உற்பத்தியைக் கொள்வனவாளனின் தேவைக்கேற்ப அமைப்பதைக் குறிக்கும். சந்தைப் படுத்துவோர் தொடர்ந்தேர்ச்சியாக நுகர்வோரின் சுவையை அவதானித்து உற்பத்தியை புதிய விருப்பங்களையும் தேவைகளையும் நிறைவு செய்யும் வண்ணம் அபிவிருத்தி செய்தல் வேண்டும். உதாரணமாக வாடகைக்கார் சேவையை கொழும்பு மாநகரில் 1960 களில் ஹினி அப்புகாமி அன் கோ அளித்த சேவையிலும் சிறப்பாக எட்கின்ஸ் ஸ்பென்ஸ் கம்பனி ரெடியோ கப் (Radio Cab) என்ற பெயரில் நவீன வாடகைக்கார் சேவையை அளிக்கின்றது. அது வாடிக்கையாளரின் நவீன பாணிக்கு ஏற்றதாகவுள்ளது.

பௌதீகப் பங்கீடானது நேர,இடப்பயன்பாட்டினை அளிப்பதுடன் உற்பத்தியை உடைமை கொள்ளும் நிலையை அளிக்கின்றது. இன்றைய கணிப்பீடுகளின்படி ஒரு பொருளிற்கு நுகர்வோர் அளிக்கும் விலையில் 20 வீதம் அப் பொருளைச் சந்தைக்கு இடமாற்றுகின்ற செலவாக அமைத்துள்ளது. பங்கீட்டுத் தொழிற்பாட்டில் இருப்புமுகாமை, போக்குவரத்து, பண்டகசாலை அமைத்தல், பொருட்கள் கைமாற்றும் கட்டளைகள் என்பன அடங்குகின்றன.

தொடர்புறுதலில் சந்தைப் படுத்துவோனிடம் இருந்து தகவல்களைப் பரிமாற்றம் செய்தலைக் குறிக்கும். இது சந்தையில் உற்பத்திக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்கும் விளம்பரம் ஏனைய தொடர்புகளைக் முக்கியமாகக் கருதுகிறது.

கொடுக்கல்—வாங்கல் என்னும் போது கொள்வனவு நிகழ்கின்ற இடத்தில் இடம்பெறும் சகல நடவடிக்கைகளையும் (கடன் ஏற்பாடுகளையும்) உள்ளடக்கும்.

ஒரு உற்பத்தியின் திருப்தியை உறுதிப்படுத்தும் நடவடிக்கை கொண்டதாக கொடுக்கல் வாங்கலின் பிந்திய சேவை அமைந்துள்ளது. மீண்டும் மீண்டும் விற்பனையை அமைப்பதற்கும் சந்தைப்படுத்துவோருக்கு உற்பத்திகளை முன்னேற்றம் செய்வதற்கான தகவல்களைப் பெறவும் கொடுக்கல் வாங்கலின் பிந்திய சேவை உதவி புரிகின்றது.

சந்தைப் படுத்தலில் சந்தைப்படுத்தற் சேர்வை (Marketing Mix) என்பது பெரிதும் எடுத்துரைக்கப்படும் ஒன்று. இது விற்பனை மட்டத்தை உயர்த்த நிறுவனம் கையாளும் சந்தைப்படுத்தல் மாறிகளின் சேர்வையைக் குறிக்கும். இது முகாமைத் தொழிற்பாட்டினூடாக செய்யப்படுகிறது. உத்தம சந்தைப் படுத்தற் சேர்வையை அமைப்பதிலேயே தொழிலாட்சி நிறுவனம் ஒன்றின் சந்தைப் படுத்தல் வெற்றி தங்கியுள்ளது எனலாம்.

## புதுமை உருவாக்கம்:-

தொழிலாட்சி ஒன்று தனியே பொருட்கள் சேவைகளை வாடிக்கையாளனுக்கு வழங்குவதால் மட்டும் பூரணமான தொழிலாட்சியாக மாறிவிடுவதில்லை. அது பொருளாதாரப் பெறுமதியை பொருட்கள், சேவைகளாக திறம்பட அளித்தல் வேண்டும். இவ்வாறு திறம்பட அளிப்பதற்கு புதுமை படைக்கும் ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும். பல வழிகளில் இப்புதுமையுருவாக்கம் காணப்படலாம். போட்டியாளனிலும் குறைந்த விலையை, அல்லது சிறந்த பொருளை அது தருவதாக இருக்கலாம். யப்பானிய கடிகாரக் கம்பனிகள் நுகர்வோரிற்கு இலத்திரனியலைப் பயன்படுத்தி எழுத்துருவிலான (Digital) நேரத்தைக் காட்டும் கைக் கடிகாரங்களை வழங்கியதன் மூலம் மரபு ரீதியான முறையில் கடிகாரச் சந்தையில் தனியுரிமை பெற்றிருந்த சுவிஸ் நாட்டுக் கம்பனிகளை வெற்றி கொண்டமை இதற்கு சிறந்த உதாரணமாகும். சந்தைப் படுத்தல் எவ்வாறு தொழிலாட்சியின் சகல பிரிவிலும் விரவியிருக்க வேண்டுமோ அவ்வாறே இப்புதுமையுருவாக்கமும் சகல அம்சங்களிலும் காணப்படல் வேண்டும். எனவே பொருளை வடிவமைத்தலிலோ, அதன் சந்தைப்படுத்தும் தொழில் நுட்பத்திலோ, அதன் விலையிலோ எதுவாயினும் புதுமையுருவாக்கம் இருத்தல் அவசியம். இது எவ்வகை தொழிலாட்சி நிறுவனத்திற்கும் பொருத்தமானதாகும்.

புதுமை படைக்கும் ஆற்றலை தொழிலாட்சியின் அறிவுப் பகுதி எனலாம். தொழிலாட்சியின் அறிவுடன் ஒப்பு நோக்குகையில் பௌதீகப் பொருட்கள் சேவைகள் வெறுமனே நுகர்வோரின் கொள்வனவு சக்தியை பரிமாற்றுகின்ற வாகனமாக அமைகின்றன. தொழிலாட்சி என்பது ஒரு மனித ஒழுங்கமைப்பு எனக் கண்டோம். எனவே அது மக்களின் பண்புகளாய் உருவாக்கப்பட்டது. ஊழியம் ஒரு நாள் முற்றாக இயந்திரங்களினால் செய்யப்படலாம். ஆனால் அறிவு சிறப்பானதொரு மனிதவளம். இது புத்தகங்களிலிருந்து பெறப்படுவதில்லை. ஆனால் அறிவு என்பது குறிப்பிட்ட ஒரு தொழிலிற்கு அல்லது செயலுக்கு அதனைப் பயன்படுத்தக் கூடிய ஒரு ஆற்றலாகும். அது மனிதனிடமிருந்தே வருகின்றது. ஒரு தொழிலாட்சியின் வெற்றிக்கு வாடிக்கையாளனின் திருப்தியையும் பெறுமதியையும் தரக் கூடிய ஒன்றாக அது அமைக்கப்படல் வேண்டும்.

நிறுவனத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்க இவ் அறிவினை புதுமையைப் புகுத்தக் கூடியவர்களை நிறுவனத்தில் புகுத்த வேண்டும். எனவே தன் உடல் உழைப்பாளிகளிற்குப் பதிலாக முகாமையாளர்களையும் தொழில் நுட்பவியலாளர்களையும் தொழில் தேர்ச்சியுடையவர்களையும் பிரதியீடு செய்ய வேண்டும் எனப்படுகிறது. இவ் உற்பத்தி திறனை அதிகரித்தல் நிறுவனத்தின் நிர்வாகத் தொழிற்பாடெனலாம். ''பொருளியலாளர் அதிகம் கவனம் செலுத்துகின்ற 'மூலதனவாக்கத்தின் வீதம்' ஒரு பொருளாதாரத்தின் அபிவிருத்திக்கு அடிப்படைக் காரணியல்ல'' உண்மையான காரணி மூளை உருவாக்கமே (Brain Formation) எனபீற்றர் எவ். றக்கர் குறிப்பிடுகின்றார் இங்கு மூளை உருவாக்கம் என்பது கல்வி, கற்பனை சக்தி, கோட்பாடுகளை பகுத்தாய்வு செய்யுமாற்றல் என்பவற்றையுடை மக்களை ஒரு நாடு உருவாக்கின்ற வீதத்தினையே இது குறிக்கின்றது அமெரிக்க உற்பத்தித்திறன் ஐரோப்பிய உற்பத்தித்திறனுடன் ஒப்பிடுகையில் 3:2 ஆக இருக்கின்றது. இதற்குக் காரணம் இரு பிரதேசங்களிலும் மூலதனச் செலவு சமனாக இருப்பினும் அமெரிக்காவில் ''வியர்வைக்குப் பதிலாக அறிவும்'' (Sweat by Knowledge), 'உடலுழைப்புக்குப் பதிலாக மூளை உழைப்பும்' (Brawn by Brain) அதிகமாக இருத்தலாகும். இந் நிலையே நாம் சிங்கப்பூர் நாட்டிலும் காண்கிறோம்.

ஒவ்வொரு தொழிலாட்சியும் ஒரு குறிப்பிட்ட அறிவினைச் சிறப்பாகக் கொண்டிருப்பதினால் வெற்றியைத்

தேடுகின்றன. உதாரணமாக சுவிஸ் வங்கி பணத்தினை முகாமை செய்வதில் முன்னணி வகிக்க (IBM.) நிறுவனங்களிற்குத் தேவையான தகவல்களை பெற்று சேவதில் முன்னிற்கிறது. லீவர் பிறதேர்ஸ் நிறுவனம் சலவைப் பொருட்களிலும் பேக்கரிப் பொருட்களிலும் முன்னிற்கிறது. சில சமயங்களில் ஏனைய கம்பனிகள் செய்யக் கூடிய ஒன்றை சில கம்பனிகள் திறம்பட ஒரு புதுமையை புகுத்துகின்றன. பெரும்பாலான அப்ப ளத் தயாரிப்பாளர் உள்ளபோதும் சில வணிகக்குறிகளை நாம் குறிப்பிட்டு வாங்குவதில்லையா? யோக்கட் தயாரிப்பில் ஈடுபட்டிருந்த பலர் (1982ம் ஆண்டளவில்) கொழும்பில் காகித கப்களைப் பயன்படுத்த இரு தயாரிப்பாளர்கள் பிளாஸ்ரிக் கப்களை பயன்படுத்துவதன் மூலம் புதுமை செய்தனர். இது அக் குறிப்பிட்ட தொழிலாட்சிகளிற்கு வெற்றியைத் தந்தது. அதனை ஏனையோரும் பினனர் பின்பற்றத் தொடங்கினர்.

அறிவு பழுதடையக் கூடியது. எனவே அது மீண்டும் மீண்டும் கற்கவும் பயிற்சிக்கப்படவும் வேண்டியது எதில் நாம் புதுமையைப் புகுத்தமுடியும் என்று தொழிலாட்சிகள் தம்மைத்தாமே கேட்டுக் கொள்ளவேண்டும் ஆனல் இப் புதுமையை உருவாக்குகின்ற ஆற்றலினைச் சகல கம்பனிகளும் சகல துறைகளிலும் கொண்டவை எனக் கூறமுடியாது. உதாரணமாக பாரிய யந்திர உற்பத்தியில் வெற்றிபெற்ற அமெரிக்க ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனம் விமான இயந்திர உற்பத்தியில் தோல்வி தழுவியதையும், இலங்கையில் மகாராஜா ஸ்தாபனம் பல துறைகளில் வெற்றிபெற்றபோதும் கார், மோட்டார் சைக்கிள் வியாபாரத் துறைகளை மூடி பிறிதொரு நிறுவனத்திற்கு விற்றமையையும் குறிப்பிடலாம். எனவேதான் நூறு கம்பனிகளில் 25 கம்பனிகளே அவற்றின் 5-ம் வருடத்தில் உயிருடன் இருக்கின்றன எனப்படுகிறது.

தொழிலாட்சியில் புதுமையை உருவாக்கல் குறித்த ஆய்வுகள் சந்தைப்படுத்தல் குறித்த ஆய்வுடன் இணைந்து நோக்கப்படவேண்டும். இதனல் சந்தை வாய்ப்புக்கள் பற்றி அறிந்துகொள்ள முடிவதுடன் சந்தையில் முன்னணியில் நிற்பதற்கு எப் புதிய அறிவினைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதும் புலனுகின்றது.

தொழிலாட்சியின் தொழிற்பாடுகள் திறம்பட இருத்தல் அதன் வெற்றிக்கு அவசியமாக இருப்பினும் தொழிலாட்சி நற்பெறுபேறுகளை பெறுவதற்கு அதன் உற்பத்தியும், உற்பத்தி வழிகளும் அல்லது சேவைகள் சநதைகள் பங்கீட்டு வழிகள் என்பவற்றில் விசேட கவனம் எடுக்கப்படவேண்டும் எனப்படுகிறது. உற்பத்தி நிறுவனத்தில் உள்ளே இருப்பதினுல் அதனிலும் பார்க்க ஏனைய இரு அம்சங்களிலும் கவனம் அதிகம் தேவையாகும்.

## தொழிலாட்சியின் நோக்கங்கள்:-

தொழிலாட்சியின் நோக்கம் குறித்து அறிஞர்களிடையே கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன தொழிலாட்சியின் நோக்கங்களை நிர்ணயிப்பதில் அறிஞர்கள் தத்துவார்த்த ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் தமது அணுகுமுறைகளை அமைத்துக்கொள்கின்றனர். ஆனல் தொழிலாட்சி நிறுவனம் ஒன்றின் நடத்தை அதன் நோக்கங்களை நோக்கி அமைந்திருப்பதை யாரும் மறுப்பதற்கில்லை. நோக்கங்கள் நிறுவனத்தின் சகல முகாமைத்துவ செயற்பாட்டிலும் இணைந்து காணப்படுகின்றன. இதனை நோக்கங்களினூடாக முகாமை செய்தல் (Management by Objectives) என்பர். நோக்கங்கள் முகாமைததுவ கருவிகளாக (Management Tool) பயன்படுத்தப்படுகின்றன. நோக்கங்கள் ஏன் தேவைப்படுகின்றன என்பது பற்றி பல அறிஞர்கள் விளக்கங்களைத் தந்துள்ளனர். ஆனுல் அவர்கள் பொதுவாக நிறுவனம் இருப்பதற்கான காரணத்தை சில வார்த்தையில் எடுத்துக் கூறவும் பெறுபேறுகளை அவற்றைக் கொண்டு மதிப்பிடவும், ஒவ்வொரு உப பிரிவுகளும் முதல் நோக்கங்களைவிட்டு நீங்கிவிடாதிருக்கவும், கட்டுப்பாட்டினை மேற்கொள்ளவும் நோக்கங்கள் குறிப்பிடப்படுவதாகக் கருதுகின்றனர் ஆனுல் ஒரே நோக்கத்தினையே தொழிலாட்சி நிறுவனங்கள் கொண்டிருக்கின்றனவா என்று தேடுவது ஒரு மந்திரவிதியை தேடுவது போலாகும் எனப்படுகிறது. இன்று நிறுவன நோக்கத்தினை அமைப்பதில் தத்துவ, சரித்திர ரீதியான விளக்கங்களிலும் நடைமுறைகட்கு ஏற்ப அமைத்தல் என்பது பெரிதும் எடுத்துக் கூறப்படுகிறது.

நிறுவன நோக்கங்களாக இலாபம் ஈட்டல், பங்குதாரரிற்கு சமமான பொறுப்புடையவராதல் நீண்டகாலத்திற்கு தப்பியிருத்தல் (Long-Term Survival) நிறுவனத்தில் பங்குபற்றும் பல்வேறு திறத்தவருககு கிடையிலான பேசித்தீர்க்கப்பட்ட இணக்கம் என்பவற்றைக் குறிப்பிடுகின்றனர்.

## இலாபத்தை உச்சப்படுத்தலின் நிறைவுத் தன்மை:-

பொருளாதார ரீதியாக அல்லது பணம் தேடல் தூண்டுகையான நோக்கமாகவுள்ள ஒரு சமூக ஒழுங்கமைப்பே தொழிலாட்சி என மரபுரீதியாகக் கருதப்படுகின்றது. மேலும் மரபுரீதியாக தொழிலாட்சி ஒன்றின் வெற்றி அதன் இலாபம் மூலம் அளவிடப்படும். இவ்விலாபமீட்டலே தொழிலாட்சியை ஏனைய சமூக நிறுவனங்களான அரசாங்கம், கோவில், நலன்புரிச் சங்கங்கள் என்பனவற்றிலிருந்து வேறுபடுத்தும் கார

ணியாகும். எனவே இலாப மீட்டல் அல்லது இலாபத்தை உச்சப்படுத்தல் தொழிலாட்சியின் இயல்பான ஒரு நோக்கமாகத் தோன்றுகின்றது.

இலாப உச்சப்படுத்தலே ஒரு நிறுவனத்தின் நோக்கமாக அமைந்திருப்பதாக 19ம் நூற்றாண்டு பொருளியல் அறிஞர்கள் தமது பொருளியல் கோட்பாடுகளை அமைத்துக்கொண்டனர். நிறுவனத்தின் நுண்பாகப் பொருளியல் கோட்பாடுகள் இலாபத்தினை உச்சப்படுத்தலை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டன. இப் பொருளியலாளரின் கோட்பாட்டிற்கு முகாமை எழுத்தாளர்கள் பலத்த எதிர்ப்பைதெரிவித்து இலாப உச்சப் படுத்தல் அல்லது இலாபமீட்டல் என்ற நோக்கத்திற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த இடத்தினை நீக்கி வேறு நோக்கங்களை — முன்னர் குறிப்பிட்டவற்றை— அதனிடத்தே அமைத்தனர். சிலர் இலாபத்தினை பண்பாட்டற்ற ஒன்றாகவும் சமூக ரீதியாக ஏற்க முடியாதவொன்றாகவும் கருதுகின்றனர். ஆனல் வேறு சிலர் இலாபத்தின் முக்கியத்துவத்தினையும் அதன் பங்கினையும் அவசியம் என வாதிடுகின்றனர் எனவே இக் கருதுகோள் ஒரு குழப்பமான நிலையில் உள்ளது என H. இகோர் அன்சோவ் (H. Igor Ansoff) குறிப்பிடுகின்ருர்.

இலாபத்தினை உச்சப்படுத்தல் என்ற கோட்பாட்டின் நிறைவுத் தன்மையை ஆய்வு செய்வோர் இவ் இலாபத்தினை உச்சப்படுத்தல் நோக்கம் ஒரு நிறுவனத்தின் நீண்டகால, குறுங்கால செயற்பாட்டினைக் கருத்திலெடுக்கவில்லை எனவும் நிறுவனத்தின் முதலீட்டுக்கான தற்போதைய இலாபத்திற்கும் எதிர்கால மூலதனத் திரும்பலிற்கும் இடையிலான பரிமாற்றத்தை அங்கீகரிக்கவில்லை எனவும் சுட்டிக் காட்டினர். 18ஆம் 19-ஆம் நூற்றாண்டுகளில் ஆராய்ச்சி அபிவிருத்தி மூலம் நீண்டகாலத்தில் தேவையான தொழில்நுட்பத்தை அமைத்துக் கொள்வதும், நீண்டகாலத்தில் மூலதன சாதனங்களின் தேவையைக் கருத்திற் கொள்ளாமையும் காணப்பட்டமையாலேயே இலாபத்தினை உழைத்துக் கொள்வதே நிறுவனத்தின் வெற்றியை அளவிடும் அளவு கோலாகக் கருதப்பட்டது. தற்காலத்து முகாமையறிஞர்கள் இலாபத்தை உச்சப்படுத்தல் மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளப்படுமாயின் நிறுவனம் நீண்டகால நோக்கங்களைக் கைவிடுவதினுல் எதிர்காலத்தில் அது உயிர்தப்பி இருப்பதே ஆபத்தானது. எனவே அது நீண்டகாலம் தப்பி இருக்க வேண்டின் நீண்டகால நடவடிக்கைகளைக் கவனத்தில் எடுப்பதைத் தவிர்க்க முடியாது என்றனர். உதாரணமாக இலங்கையில் உல்லாசப் பிரயாணத்துறையின் செழிப்புக் காலத்தில் (1977-82) இத்தகு பேராசை ஹோட்டல்துறையில் காணப்பட்டமையால் ஹோட்டல்களின் வாடகை 4மடங்கு அதிகரித்ததுடன் ஹோட்டல் துறையினர் போதிய நிதியை திருத்தவேலைகளிற்கு ஒதுக்காதுடன் போதுமான நிதி ஒதுக்கமும் செய்யாதிருந்தனர் என நிதிமந்திரி 1985இல் உல்லாச ஹோட்டல் சங்கத்தின் கூட்டத்தில் தெரிவித்ததைக் காணலாம். அண்மைக் காலத்தில் பொருளாதார வர்த்தக எழுத்தாளர்கள் குறுங்காலத்தில் இலாபத்தை உச்சப்படுத்தலிற்கு பிரதியிடாக கம்பனியின் தேறியதற்கால பெறுமதியை உச்சப்படுத்தல் நிறுவனத்திற்கான சந்தைப் பெறுமதியை உச்சப்படுத்தல், இலாபத்தை கட்டாயமாகக் கொண்ட நிறுவன வளர்ச்சியை உச்சப்படுத்தல் என்ற கோட்பாடுகளை ஏற்படுத்தினர். இவை தர்க்கரீதியாக ஏற்கக் கூடியதாஞலும் மெய்யியல் ரீதியாகவோ, அநுபவரீதியாக தரவுகளின் அடிப்படையிலோ அமைக்கப்பட்டவையல்ல.

## ஏனைய நோக்கங்கள்:-

இலாபத்தை உச்சப்படுத்தல் பற்றிய கோட்பாட்டின் வலிமையைத் தாழ்த்தும் வகையில் எழுந்த ஏனைய நோக்கங்களில் நீண்டகாலம் உயிர் தப்பியிருத்தல் என்பதை நோக்குவோம். நவீன முகாமைத்து அறிஞர்களில் மிகப் பிரபல்யமான பீற்றர். எவ். றக்கர் இலாப உச்சப்படுத்தலை மிகப்பலமாகச் சாடி 'ஒரு நிறுவனத்தினை இலாபத்தின் அடிப்படையில் விளங்கப்படுத்தவோ வரைவிலக்கணப்படுத்தவோ முடியாது என்றும் எந்த தொழிலாட்சியினதும் பிரச்சினை இலாப உச்சப்படுத்தலல்ல; ஆனல் பொருளாதார நடவடிக்கைகளின் போது ஆபத்தினை ஈடு செய்வதற்கு போதுமான இலாபத்தை பெற்றுக் கொள்வதும் அதனுல் நட்டத்தைத் தவிர்ப்பதுமேயாகும்' என்கிருர். அவரது கருத்துப்படி நீண்ட காலத்திற்கு உயிர் தப்பியிருத்தலே நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும்' எனவே இலாபம் மீளவும் முதலீடு செய்யவும், பங்குதாரரை திருப்திப்படுத்தல் போன்றவற்றிற்கு போதுமானதாக இருந்தால் போதுமானது என்கிருர். போதுமான இலாபகரத்தன்மை, அவர் குறிப்பிடும் நிறுவனங்களின் நோக்கங்களில் உள்ளடக்கப்பட்டபோதும் இலாபத்தை உச்சப்படுத்தல் என்றும் கருதுகோள் அதன் குறுங்காலத்திலோ அல்லது நீண்ட காலத்திலோ எடுத்தாளப்பட்டாலும் கூட ஒரு தவறான கருதுகோள் என எடுத்துக் காட்டுகின்ருர்.

குறுங்கால இலாப உச்சப்படுத்தல் கருதுகோளின் குறைபாடுகள் காரணமாக எழுந்த பிரச்சினைகள் முற்ருகத் தீர்க்கப்படவில்லை. அவை மேலும் நிறுவனங்கள் சமூகரீதியாக முக்கியம் பெறுவதினுல் சிக்கலடைந்துள்ளன. தொழிலாட்சி நிறுவனமொன்று சமூகத்துக்கு பொதுவாக பொறுப்புடையதாக இருக்க வேண்டும் என்பது எடுத்துக்காட்டப்படுகின்றது. இதனை நுகர்வோர் வாதம் (Consumerism) மேலும் தூண்டு

SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

இன்றது. ஆகவே நிறுவனத்தில் நேரடி அக்கறையுள்ள பங்குதாரர், ஊழியர்கள் வாடிக்கையாளர். பொது மக்கள் என்பவர்களின் கோரிக்கைகளை சமநிலைப்படுத் தப்பட்ட முறையில் நிறைவேற்றி இயங்க வைத்தல் நிறுவனத்தின் கடமை என Frank Abrams சுட்டிக் காட்டுகிறார்.

பொறுப்புக்களும் நோக்கங்களும் வேறு வேறானவை எனக் கருதப்படுவதால் 'பிணையம் வைப்போர் கோட்பாடுகள்' எழுந்தன. இங்கு தம்மையும் தம் பணத்தையும் தம் பொருட்களையும் நிறுவனத்திலீடுபடுத்திக்கொண்ட முகாமையாளர்கள், தொழிலாளர்கள் பங்குதாரர்கள் வழங்குனர் என்போர் அந்நிறுவனத்தின் நோக்கம் குறித்து பல வேறுபட்ட விருப்பங்களைக் கொண்டிக்கை யில் அவற்றினை ஒரு சமநிலைக்குக் கொண்டுவருதலை இக் கோட்பாடுகள் குறிக்கின்றன. எனவே நிறுவனத்தின் நோக்கம் அதில் ஈடுபட்டுள்ள ஒரு பகுதியினரைத் திருப்திப்படுத்துவது மட்டுமல்ல ஏனையவற்றையும் உள்ளடக்கும் நோக்கங்களின் கூட்டமைப்பை நிறுவனம் கொண்டிருப்பதாகும் என்பதாக இதுவுள்ளது.

நோக்கங்கள் பற்றிய கோட்பாடுகளை மேலும் சிக்கலாக்கும் வகையில் நிறுவனங்கள் பெரிதாக வளர்ச்சியடையும் வேளையில் அவை பொதுக் கம்பனிகளாக மாறுவதினால் பங்குதாரர், ஊதியம் பெறும் இயக்குனர்கள் என்ற இருபிரிவினர் உருவாகின்றனர். இங்கு பணத்தை செலுத்தியுள்ள பங்குதாரர் கூடிய பங்குலாபத்தை விரும்பினாலும்கூட இயக்குனர்களிடமும் அவர்களது முகாமையாளர்களிடமும் இலாப உச்சப்படுத்தல் முதலிடம் பெறாது நிறுவனத்தின் உறுதிப்பாடும் நிறுவனம் பற்றிய நன்மதிப்புமே முக்கியம் பெறுகின்றன.

மேலும் நிறுவனங்கள் மிகமிகப் பெரிதாக வளரும்போது அவற்றில் பல பிரிவுகள் உருவாக்கப்படுகின்றன. இவை பன்முகப்படுத்தப்பட்ட நிலையில் இயங்கும்போது மையத்தில் தீர்மானிக்கப்பட்ட சிலநோக்கங்களுடன் ஒத்துப்போகும் வகையில் ஆனால் பன்முகப் படுத்தப்பட்ட பிரிவுகளின் நோக்கங்களும் காணப்படுகின்றன. இதுவும் பொருளியலாளரின் இலாபத்தினை உச்சப்படுத்தற் கருதுகோளை மிகவும் பாதிப்பதாக அமைகின்றது. மேலும் சியேர்ட் மார்ச்(Cyert &March) என்ற இருவர் தமது 'நிறுவனத்தின் ஒரு நடத்தைக் கோட்பாடு, என்ற நூலில் 'நிறுவனங்கள் நோக்கங்களைக் கொண்டிருப்பதில்லை. மக்களே நோக்கங்களை உடையவர்கள்' எனக் குறிப்பிட்டுள்ளனர் அதன் அடிப்படையில் நிறுவனத்தில் பங்கு பற்றுவோரினால் பேரித்தீர்க்கப்பட்ட நோக்கங்களே உண்மையில் நிறுவன நோக்கங்களாகும் என்பது புலனாகின்றது. இக் கோட்பாட்டையும் தற்பொழுது முற்றாக பொருத்தமானது எனக் கூறமுடியாது எனக் கூறும் அன்சோவ் நோக்கங்களை அமைக்கும் முறையை கட்டமைத்தல் வேண்டும் எனக் கூறி நடைமுறையில் எவ்வாறு நோக்கங்கள் அமைக்கப்படுகின்றன என விளக்குகின்றார்.

## நடைமுறையில் நோக்கங்களை அமைத்தல்:-

நோக்கங்களை நடைமுறையில் அமைத்தலின்போது பல்வேறு சிக்கல்களை உயர் முகாமையாளர் எதிர் நோக்குகின்றனர். நிறுவனங்கள் நடைமுறையில் பொருளாதார ரீதியான நோக்கங்கள் சமூக அல்லது பொருளாதார ரீதியற்ற நோக்கங்கள் எனக் கொண்டுள்ளன. இதனை உபநோக்கங்கள் எனவும் சிலர் குறிப்பிடுவர்.

## பொருளாதார நோக்கங்கள்:

பொருளாதார நோக்கங்கள் என்னும் போது நிறுவனங்கள் சூழலுடன் கொண்டுள்ள தொடர்பு, உள்ளக கட்டமைப்பு, அதனது செயற்பாடுகள், அதன் வரலாறு என்பவற்றின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் நோக்கங்களைக் குறிக்கும். இது நிறுவனத்தில் பங்குபற்றுவோரின் தனிப்பட்ட நோக்கங்களைக் குறிப்பிடுவதில்லை. இவ்விளக்கம் மேலும் நிறுவனங்கள் வளங்களைப் பொருளாதாரப் பெறுமதியாக மாற்றும் செயற்பாட்டின் திறனை உச்சப்படுத்துகின்றது (ஆனால் இலாபம் உச்சப்படுத்தல் என்பதல்ல. இருக்கும் வளத்திலிருந்து உயர் விளைவைப் பெற்றுக் கொள்ளல்)

இந்நிலையில் உயர் முகாமையாளர் நிறுவனத்தின் கால வரம்பை நோக்க வேண்டும். கோட்பாட்டளவில் நிறுவனங்கள் முடிவில்லாதிருக்கும் எனப்பட்டாலும் அவை தமது நோக்கங்களை செயற்படுத்த நீண்டகால, குறுங்காலத் திட்டங்களைக் கொண்டுள்ளன. இங்கு குறுங்காலம், 3—10 வருடங்களைக் குறிக்கும். குறுங்காலத்தில் நிறுவனங்கள் தமது செயல் திறனை அளக்க மூலதனத்திற்கான திரும்புகை (R.O.I.) யினைப் பயன்படுத்த முடியும். நீண்ட காலத்தில் நிறுவனம் சந்தையில் நிலைத்தல், புதுமையுருவாக்கம், உற்பத்தித் திறன், பௌதீக, நிதியியல் வளங்கள், வேலையாட்களின்வினைத்திறனும் எண்ணங்களும் பொதுப் பொறுப்பு என்பவற்றில் கவனம் செலுத்த வேண்டும் எனப்படுகிறது.

குறுங்கால, நீண்டகால நோக்கங்கள் உற்பத்தி சந்தை வாய்ப்புக்களை பொருளாதாரத்தில் அத்தொழிலிலுள்ள போக்குகளின் அடிப்படையில் மதிப்பிடுகின்றன. ஆனால் அவை நிச்சயிக்க முடியாத சூழ்நிலை

களால் மாற்றமடைந்து போகலாம். இத்தகு நிச்சயிக்க முடியாத நிகழ்வுகள் சிலவாயினும் அவற்றின் விளைவுகளோ பெரிது இதனுல் நெகிழ்வுத்தன்மை நோக்கு (Flexibility Objective) உருவாக்கப்படுகிறது. இங்கு நிறுவனம் தனிப்பட்ட சில வாடிக்கையாளரில் அல்லது சில தொழில்நுட்பங்களில் தங்கியிருக்கும் ஆபத்து கணிப்பிடப்படுகின்றது. நிறுவனத்தின் உள்ளேயும் அதன் வளங்களை திரவத்தன்மையாகக் கொண்டிருக்கும் அளவை பரிசீலிப்பதன் மூலம் அறிய முடியும். இவற்றைக் கவனத்திற் கொண்டே பொருளாதார ரீதியான நோக்கங்கள் நிச்சயிக்கப்படுகின்றன.

## பொருளாதார ரீதியற்ற நோக்கங்கள்:-

பொருளாதார ரீதியற்ற நோக்கங்கள் எனப்படும் சமூக நோக்கங்கள் பொருளாதார நோக்கங்களை மாற்றியமைக்கவும் பிரதியீடு செய்யவும் காலாகஅமைகின்றன. உண்மையில் நிறுவனங்களில் பங்குபற்றுவோரும் அந்நிறுவன வரலாற்று ரீதியான அபிவிருததியும் பொருளாதார ரீதியற்ற நோக்கங்களிற்கு காரணமாகும். சியேட்டும் மார்ச்சும் (Cyert & March) குறிப்பிட்டது போல் 'ஒழுங்கமைப்புக்கள்' நோக்கங்களைக் கொண்டிருப்பதில்லை. மக்களே நோக்கங்களைக் கொண்டிருக்கிறார்கள், என்பது இதைச் சுட்டிக்காட்டுகின்றது. உச்ச வருவாயைப் பெறல், மூலதனலாபம், சொத்தைக் கலைத்தல், சமூகப்பொறுப்பு என்பனவற்றைத் தனிப்பட்டவர்கள் நோக்கமாகக் கொண்டிருப்பதுடன் அவர்களின் ஆபத்தை எதிர்கொள்ளும் எண்ணம் என்பனவும் நிறுவன நோக்கினைப் பாதிக்கின்றது. நிறுவனங்கள் தமது பாரம்பரியத்திலிருந்து வேலையாட்களின் வேலைக்குப பாதுகாப்பு. இனரீதியான அடிப்படை, பெது நன்மதிப்பு உள்ளிருப்பவர்க்கே பதவியுயர்வு போன்ற கொள்கைகளைக் கொண்டிருக்கலாம். இவை பொருளாதார நோக்கங்களில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியனவாகும்.

இவ்வாறு பிரேரிக்கப்பட்ட நோக்கங்களை நிறுவனங்கள் பட்டியலிடடு பின்னர் அவை அதில் முதன்மையாகக் கவனம் செய்ய வேண்டியவற்றையும் அவற்றின் இலக்குப் பெறுமதிகளையும் மதிப்பிடும் நிறுவனத்தின் முன்னைய தற்போதைய நிலை, இருக்கும் வளங்கள் போட்டி நிலைமை, நிறுவனமுள்ள தொழிலின் வாழ்க்கை வட்டம் என்பன இங்கு கருத்திற் கொள்ளப்பட்டே தீர்மானம் மேற்கொள்ளப்படும். இங்கு பொருளாதார நோக்கங்கள் முகாமையாளரின் கட்டுப்பாட்டிற்குள் இல்லாமையால் அதன் செல்வாக்கு அதிகமானது.

தொழிலாட்சி பற்றி அறிவதும் அதன் நோக்கங்களை பற்றி அறிவதும் உண்மையில் முகாமையின் தேவையையும் அதன் சமூகத்தின் நிலைப்பாட்டையும் அறிந்து கொள்ள முடிவதுடன் தொழிலாட்சிகள் இலாபம் ஈட்டுவதுடன் நின்றுவிடுவதில்லை என்பதையும் புலப்படுத்துகிறது.

## உசாத்துணை:-


1. Marketing — Concepts & Applications
   Charles D Schewe and
   Reuben M Smith

2. Practice of Management
   Peter F. Drucker 1968

3. Managing For Results
   By Peter F. Drucker 1964

4. Corporate Strategy
   H. Igor Ansoff

5. Corruption And The Economics
   By Dr. Jayantha Kelegama
   Lanka Guardian
   Vol -8 No 19

6. Marketing Myopia
   By Theodore Levitt
   Harvard Business Review
   1960 July - August


★ இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் 1986 ஆம் ஆண்டில் ரூபா. 520 மி. பெறுமதியான கடன்களை வழங்கியுள்ளது. அபிவிருத்தித் திட்டங்களின் சூப்புரவு (equity) மூலதனமாக இக்காலப் பகுதியில் ரூ.13 மி. முதலீடு செய்துள்ளது 1986 ம் ஆண்டின் இறுதியில் இந்நிறுவனத்தால் வழங்கப்பட்டு வெளிநின்ற கடன்கள் ரூ. 1, 340 மி. ஆகும்.

# மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகங்கள்
# (Regional Offices of the Central Bank)

1949 -ம் ஆண்டின் 58 -ம் இலக்க பணவியல் சட்டத்தால் மத்தியவங்கி உருவாக்கப்பட்டது. இச் சட்டத்தின் 7- ம் பிரிவின்படி இவ்வங்கியின் பிரதான தொழில் தலம் கொழும்பிலும் கிளைகள் நாட்டின் எப்பகுதியிலும் தேவையெனில் பிற நாடுகளிலும் அமைக்கப்படலாம்.

1976 செப்ரெம்பர் மாதத்தில் மத்திய வங்கி அமைப்பைச் சீர்செய்வதற்காக ஆளுனரால் நியமிக்கப்பட்ட குழு பிராத்திய அலுவலங்கள் அமைக்கப்படல் வேண்டுமெனச் சிபாரிசு செய்தது.

பிராந்திய அலுவலங்கள் அமைக்கப்படுவதனுல் மத்திய வங்கியின் பல்வேறு திணைக்களங்களின் பணி பரவலாக்கப்படுவதன் மூலம் திறமையான சேவைகளை வங்கித் துறையும் ஏனையோரும் பெற்றுக் கொள்வதற்கு வழி வகுக்கப்படுவதுடன் கிராமிய பொருளாதார அபிவிருத்தியை நெருக்கமாக மேற்பார்வையிடவும் முடியுமென நம்பப்பட்டது.

இவ்வகையில் மத்திய வங்கியின் முதல் பிராந்திய அலுவலகம் 1981-ல் மாத்தறையில் அமைக்கப்பட்டது. 1982-ல் அனுரதபுரத்திலும் 1985-ல் மாத்தளையிலும் மற்றுமிரு பிராந்திய அலுவலகங்கள் அமைக்கப்பட்டன. இவற்றுள் அனுரதபுர பிராந்திய அலுவலகம் தனது ஐந்தாவது ஆண்டு நிறைவை அண்மையில் கொண்டாடியது.

இப் பிராந்திய அலுவலகங்கள் மேம்பாட்டுப் பணியினை பெருமளவில் மேற்கொண்டு வருகின்றன. கிராமிய பொருளாதாரத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக மத்திய வங்கியால் பல மீள் நிதிக்கடன் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. சுய வேலைவாய்ப்பு மீள் நிதிக்கடன் திட்டம், கிராமிய சுவீகரிப்பு மீள் நிதிக்கடன் திட்டம் என்பவை இவற்றுட் பிரதானமானவை. இவற்றின்கீழ் மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகம் திட்டங்களை இனங்கண்டு, கடன்பெறுவோரை வணிக வங்கிகட்கு சிபாரிசு செய்கின்றது. வங்கிகள் சலுகை விகிதங்களில் கடன்களை வழங்குகின்றன. வழங்கப்பட்ட கடன்களை மத்திய வங்கி மேற்பார்வையிடுகின்றது.

குடிசைக் கைத்தொழில், மிருக வளர்ப்பு, ஏனைய சேவைகள் என்பவற்றில் சுய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் புதிய வருமானங்களை உருவாக்குவதே சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் நோக்கமாகும்.

கிராமியக் கோட்டங்களை (Clusters) அமைத்து அவற்றுக்கு வங்கி வசதிகளை வழங்குவது கிராமிய சுவீகரிப்பு திட்டத்தின் நோக்கமாகும்.

இவற்றைவிட நெல் உற்பத்திக்கடன், சிறு தேயிலை மற்றும் தெங்கு நிலவுடமையாளருக்கு வளமாக்கிகள் வழங்குவதற்கான கடன் என்பவையும் மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகத்தின் சிபாரிசின்படி வணிக வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளன.

விவசாயிகட்கு கடன் கழகங்களும் (Clubs), உற்பத்தியாளருக்கு சந்தைப்படுத்தற் கழகங்களும் இவ் அலுவலகங்களால் உருவாக்கப்பட்டுள்ளன அத்துடன் பிராந்திய மக்களுக்கு பயிற்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் ஏனைய கூட்டங்களையும் இப் பணிமனைகள் ஏற்பாடு செய்துள்ளன. கண்காட்சிகளும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

இவற்றைவிட பிராந்திய காசோலை தீர்வகங்களை இப் பிராந்திய அலுவலகங்கள் நடாத்தி வருகின்றன. பிராந்திய அலுவலங்கள் ஊடாக மத்திய வங்கி தனது செயற்பாடுகளை மேலும் அர்த்தபூர்வமான வகையில் ஆற்றமுடிகின்றது.

# இலங்கையின் பொதுப்படுகடன்
# ( PUBLIC DEBT OF SRI LANKA )

செல்வி அ. ப. சா. பற்றிக் B. A. (Hons) (Cey.)
ஆசிரியை, உடுவில் மகளிர் கல்லூரி

ஒரு நாட்டின் பொதுப்படுகடனை அக்கடன் பெறப்பட்ட மூலங்களின் அடிப்படையில் உள்நாட்டுப் படுகடன் (Domestic debt), வெளிநாட்டுப் படுகடன் (External debt) என இரண்டாக வகுக்கலாம்.

உள்நாட்டுப் படுகடன் நாட்டினுள் வதியும் தனியார் மற்றும் நிறுவனங்களிலிருந்து திரட்டப்படுவதாகும். எனினும் இங்கும் கடன் எத்துறையிடம் இருந்து பெறப்பட்டது என்ற அடிப்படையில் வங்கித் துறையிடமிருந்து பெறப்பட்ட கடன், வங்கியற்ற துறையிடம் இருந்து பெறப்பட்ட கடன் என இரண்டாக வகுக்கப்படுகின்றது. வங்கித்துறை என்னும் போது அது மத்திய வங்கியையும் வர்த்தக வங்கிகளையும் உள்ளடக்குவதாகும். வங்கியற்ற துறை என்பது நிதியுடன் தொடர்புகொண்ட ஏனைய நிறுவனங்களை உள்ளடக்குகின்றது.

கடன்களை உள்நாட்டில் திரட்டும்போது அதற்கு அரசாங்கம் பிணைகளை வழங்குகின்றது. அவை ரூபாய்ப் பிணைகளாகவோ (Rupee Securities); திறைசேரி உண்டியல்களாகவோ (Treasury Bills), வரி ஒதுக்குச் சான்றிதழ்களாகவோ(Tax Reserve Certificates) அமையும். இவற்றைவிட மத்திய வங்கியிடம் இருந்து முற்பணமாகவும் அரசாங்கம் கடன்களை பெற்றுக் கொள்கிறது. ரூபாய்ப் பிணைகளை மீளச் செலுத்துவதற்காக கடன் ஆழ்நிதி (Sinking Fund)ஒன்றை ஏற்படுத்தி ஆண்டுதோறும் அதற்கு அரசாங்கம் பங்களிப்புச் செய்கின்றது. இதன்மூலம் கடன் முதிர்வுறும் போது கடன்தொகையை சிரமமின்றி அரசாங்கத்தால் இறுக்க முடிகின்றது. மொத்த உள்நாட்டு படுகடனில் இருந்து கடன் ஆழ்நிதி மீதியைக் கழிக்க எஞ்சுவதே நிகர உள்நாட்டுப் படுகடன் மீதியாகும்.

அண்மைக் காலத்தில் உள்நாட்டுப் படுகடனின் அளவு வேகமாக அதிகரித்துச் சென்றுள்ளது.

இதனைப் பின்வரும் அட்டவணை விளக்கும்:-

**உள்நாட்டுப் பொதுப் படுகடன் (ரூ. மி)**

| ஆண்டு | மொ.படுகடன் | நி.படுகடன் |
|---|---|---|
| 1970 | 6,295 | 5,686 |
| 1975 | 10,859 | 9,255 |
| 1980 | 29,379 | 24,502 |
| 1984 | 52,237 | 42,060 |
| 1985 | 63,197 | 56,047 |
| 1986 | 70,085 | 63,655 |

மூலம்: மத்திய வங்கி
மாதாந்த அறிக்கை ஜன. 87

1986 -ம் ஆண்டின் ஈற்றில் காணப்பட்ட மொத்த உள்நாட்டுப் படுகடன் ரூ. 70,084.5 மி. ஆகும்.

அதன் பகுப்பு வருமாறு:-

| | ரூ. மி. | % |
|---|---|---|
| ரூபாய் பிணைகள் - | 39,129.8 | 55.8 |
| திறைசேரி உண்டியல் - | 26,172.6 | 37.4 |
| மத்திய வங்கி முற்பணம் - | 4,625.5 | 6.6 |
| வரி ஒதுக்குச் சான்றிதழ் - | 9.1 | 0.01 |
| தேசிய அபிவிருத்தி முறிகளும் நிர்வாகக் கடன்களும் - | 147.5 | 0.2 |
| | 70,084.5 | 100.01 |

இவற்றுள் ரூபாய்ப் பிணைகளின் 44.2 %தை ஊழியர் சேம இலாப நிதி கொள்வனவு செய்திருந்தது. தேசிய சேமிப்பு வங்கி 34.8% பிணைகளின் உடமையாளராக இருந்தது. வர்த்தக வங்கிகள் ரூ.851.8 மி. மட்டுமே கொள்வனவு செய்து 2.1 % பிணைகளின் உடமையாளராக காணப்பட்டன. இவைகூட இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பவற்றாலேயே கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. ஏனைய வர்த்தக வங்கிகள் ரூ. 2.1 மி. மட்டுமே கொள்வனவு செய்திருந்தன.

திறைசேரி உண்டியல்களில் மத்திய வங்கியின் முதலீடு 84.5 % மாக அமைந்திருந்தது. வங்கித்துறையுள் மக்கள் வங்கி ரூபா 150 மி. முதலீடு செய்திருந்தது. அரசாங்க கூட்டுத்தாபனங்கள் ரூ. 3,127.6 மி. பெறுமானமுள்ள திறைசேரி உண்டியல்களின் உடமையாளராக காணப்பட்டன.

ரூபாய்ப் பிணைகட்கு மட்டுமே கடன் ஆழ் நிதி ஏற்படுத்தப்பட்டிருந்தது. 1986 இன் ஈற்றில் இதன் பெறுமானம் ரூ. 6,429.1 மி. ஆகும். இதுபோக நிகர உள்நாட்டு படுகடனாகக் காணப்பட்ட தொகை ரூ.63,655.4 மி. ஆகும்.

இலங்கையின் வெளிநாட்டுப் படுகடனை அவை பெறப்படும் மூலங்களின் அடிப்படையில் மூன்றாக வகுக்கலாம்:

1. சர்வதேச நிறுவனங்களிலிருந்து பெறப்படுபவை.
2. உதவி வழங்கும் நாடுகளின் கூட்டிலிருந்து பெறப்படுபவை (Consortium Aid Group).
3. ஏனைய மூலகங்களிலிருந்து பெறப்படுபவை.

நோக்கத்தின் அடிப்படையில் இவை கருத்திட்டக் கடன்களெனவும் (Project Loans), கருத்திட்டங் களற்ற கடன்கள் (non – project Loans) எனவும் மேலும் இருபிரிவாக வகுக்கப்படலாம். கருத்திட்டங் களற்ற கடன்கள் பொருட்கடன்களெனவும் (Commodity Loans), ஏனைய கடன்களெனவும் இரு பிரிவாக வகுக்கப்படலாம்.

இலங்கை பல்வேறு சர்வதேச நிறுவனங்களிலிரு ந்து கடன்களைப் பெற்றுக் கொள்கின்றது. ஆசிய அபி விருத்தி வங்கி (Asian Development Bank), புனர மைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி (I. B. R. D.)அல்லது உலக வங்கி, சர்வதேச அபிவிருத் திக் கழகம் (I. D. A) சர்வதேச நாணய நிதியம் (I. M. F) விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (I. F. A. D.) என்பன இவற்றுட் பிரதான மானவையாகும்.

1986ன் ஈற்றில் இவற்றிடமிருந்து பெறப்பட்ட கடன்களில் ரூ 23, 114.6 மி. வெளிநின்றன. இத் தொகையுள் ரூ. 2,061 மி.(8. 92 %) தவிர்ந்த எஞ்சிய தொகை திட்டக்கடன்களாகவேவழங்கப்பட்டிருந்தன. வெளி நின்ற கடன்களுள் 60.8% மான ரூ.14,053.5மி. பெறுமானம் கொண்ட கடன்கள் சர்வதேச அபிவிருத் திக் கழகத்தால் வழங்கப்பட்டிருந்தன. ஆசிய அபி விருத்தி வங்கி வழங்கிய கடன்கள் ரூ. 5,852.5 மி. (25.3%) ஆகும். எஞ்சிய 13.9% மான கடன்களே ஏனைய நிறுவனங்களால் வழங்கப்பட்டிருந்தன.1986ன் ஈற்றில் வெளி நின்ற மொத்த வெளிநாட்டுப்படுகடன் களுள் சர்வதேச நிறுவனங்கள் வழங்கிய கடன்கள் 26.8% மாக அமைந்திருந்தன.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டு கனடா, டென்மார்க், பிரான்ஸ், ஜேர்மன், சமஷ் டிக் குடியரசு, இந்தியா, ஜப்பான், ஐ. அ. நாடுகள், ஒல்லாந்து ஆகிய எட்டு நாடுகளை அடக்கிய அமைப் பாகும். 1986ஆம் ஆண்டின் ஈற்றில் இவ்வமைப்பிலி ருந்து பெறப்பட்டு வெளி நின்ற கடன்கள் மொத்த வெளிநாட்டுப் படுகடனின் 58·8% மாக அமைந்திருந் தன. வெளிநின்ற கடன் தொகை ரூ. 50,684.9 மி. ஆகும். இந்த அமைப்பு வழங்கிய கடன்களுள் 45.1% (ரூ.22,882.7மி.) திட்டக்கடன்களாகவும், 53.8% (ரூ.27.264மி.) பொருட்கடன்களாகவும் அமைந்திருந் தன. ரூ.538.2மி. பெறுமதியான பணக்கடனை ஜப் பான் வழங்கியிருந்தது. ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு, ஜப்பான், ஐ. அ. நாடுகள் என்பவை திட்டக்கடன் களுற் பெரும்பாலானவற்றை (ரூ.20,018.7மி. அல் லது 87.5%) வழங்கி இருந்தன. எஞ்சியவையே ஏனையநாடுகளிடமிருந்து பெறப்பட்டிருந்தன. பொருட் கடன்களுள் பெரும்பாலானவற்றை (ரூ.19,835மி. அல்லது 72.8%) ஐ. அ. நாடுகளும், ஜப்பானும் வழங்கியிருந்தன.

இலங்கைக்கு கடன் வழங்கும் வெளிநாட்டு மூலங் களின் மூன்றும் வகுதி "ஏனைய" என்ற தலைப்பின் கீழ் மத்திய வங்கியால் பாகுபடுத்தப்பட்டிருக்கின்றது. 1986இன் ஈற்றில் வெளிநின்ற வெளிநாட்டு மொத் தப் படுகடனின் 14.4% (ரூ.12,408.7மி.) இப்பிரி வினரிடமிருந்து பெறப்பட்டிருந்தது.

இப்பிரிவின் கீழ் 8 நாடுகளும், பெற்றோலிய ஏற்று மதி நாடுகளின் அமையம் (O.P.E.C.), சவுதி அரே பிய நிதியம் போன்ற அமைப்புகளும், 6 வெளி நாட்டு வங்கிகளும் அடங்குகின்றன. உள்ளூரில் கிளை களைக் கொண்டிருக்கும் கரை கடந்த வங்கிகள் ரூ.4,843.9மி. பெறுமானம் கொண்ட இயூரோ நாணயக் (Euro Currency) கடன்களை திரட்டி வழங் கியிருந்தன.

இப்பிரிவின் கீழ் அடங்கும் கடன்களுட் பெரும் பாலானவை (52.2% அல்லது ரூ.6,481.6மி.) திட்டக் கடன்களாகவும் 43.7% அல்லது ரூ.5,425.4மி. பணக் கடன்களாகவும் அமைய 4% (அல்லது ரூ.501.7மி.) மட்டுமே பொருட்கடன்களாகக் காணப்படுகின்றன. திட்டக்கடன்களுக்குள்ளும் ரூ. 3,667.4மி. (அல்லது 56.6%) பெறுமானமுள்ள கடன்கள் வெளிநாட்டு தனியார் துறை வங்கிகளால் வழங்கப்பட்டிருந்தன.

1986-ம் ஆண்டின் ஈற்றில் இலங்கையின் மொத்த வெளிநாட்டுப் படுகடனுக அமைந்த தொகை ரூ. 86, 208.2.மி. ஆகும். இத் தொகையில் ஐ. அ. நாடு களிலிருந்து 18. 8% (ரூ. 16, 213. 9 மி.னும்) ஜப்பா னிலிருந்து 18. 5 % (ரூ. 15, 568. 4 மி. னும்) பெறப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டுப் படுகடனுக்கு கடன் ஆழ் நிதி உரு வாக்கப்படவில்லை. எனவே மொத்தப் படு கடனும், நிகரப் படுகடனும் ஒரே தொகையின தாகவே காணப் படுகின்றது. கடந்த சில ஆண்டுகளில் வெளி நாட்டுப் படுகடன் வேகமாக அதிகரித்துச் சென்றுள்ளது. அத னைக் கீழ் வரும் அட்டவணை விளக்கும்:-

**வெளிநாட்டுப் படுகடன் (ரூ. மி.)**

| ஆண்டு | | தொகை |
|---|---|---|
| 1970 | — | 1, 550. 9 |
| 1975 | — | 3, 704. 9 |
| 1980 | — | 22, 276. 8 |
| 1984 | — | 53, 680. 8 |
| 1985 | — | 67, 673. 2 |
| 1986 | — | 86, 208. 2 |

மூலம்: மத்திய வங்கி
மாதாந்த அறிக்கை ஜன. 87.

1986-ல் இலங்கையின் பொதுப் படுகடன் ரூ 156, 292. 7 மி. ஞக இருக்கஇதன் 55. 2% வெளி நாட்டிலிருந்து பெறப்பட்டதாக அமைந்திருந்தது. பொதுப் படுகடனில் வெளிநாட்டுப் படு கடனின் பங்கு கடந்த மூன்று ஆண்டுகளாகவே அதிகரித்துக் காணப்பகின்றது. அதன் முன்னர் உள்நாட்டுப் படுகடனின் அளவே அதிகமாக அமைந்திருந்தது.

இதனைப் பின்வரும் அட்டவணையிலிருந்து அறிய முடியும்:-

| ஆண்டு | மொ/பொது படுகடன் | மொ/உள். படுகடன் | % | மொ. வெளி. படுகடன் | % |
|---|---|---|---|---|---|
| 1980 | 51,655.6 | 29,378.8 | 56.9 | 22,276.8 | 43.1 |
| 1981 | 64,999.3 | 35,827.2 | 55.1 | 29,172.1 | 44.9 |
| 1982 | 80,172.9 | 45,575.6 | 56.8 | 34,597.3 | 43.2 |
| 1983 | 98,379.6 | 52,354.6 | 53.2 | 46,025.0 | 46.8 |
| 1984 | 105,917.7 | 52,236.9 | 49.3 | 53,680.8 | 50.7 |
| 1985 | 130,869.9 | 63,196.7 | 48.3 | 67,673.2 | 51.7 |
| 1986 | 156,292.7 | 70,084.5 | 44.8 | 86,208.2 | 55.2 |

மூலம்: மத்திய வங்கி
மாதாந்த அறிக்கை ஜன.'87

மேற் கூறியவற்றிலிருந்து பின்வருவனவற்றை அறிய முடிகின்றது.

1. அண்மைக் காலத்தில்பொதுப் படுகடனதுஅளவு பல மடங்காக அதிகரித்துச் சென்றுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் வெளிநாட்டுப் படுகடனது பங்கு வேகமாக அதிகரித்துச் செல்கின்றது.

2. உள்நாட்டுப்படுகடனில் மிகப் பெருமளவு திறைசேரி உண்டியல், ரூபாய்ப் பிணைகள் என்பவற்றிலிருந்து பெறப்படுகின்றது. இவற்றுக்கும் குறித்த சில நிறுவனங்களே அதிகளவில் பங்களிப்பு வழங்கி வருகின்றன.

3. வெளிநாட்டுக் கடன்களை வழங்கும் பிரதான மூலமாக 'உதவி புரியும் நாடுகளின் கூட்டு' காணப்படுகின்றது. திட்டக்கடன்களாகவும் பொருட்கடன்களாகவும் இவற்றிடமிருந்து கடன் திரட்டப்படுகின்றது. சர்வதேச நிறுவனங்கள் பெருமளவுக்குத் திட்டக்கடன்களையே வழங்கி வருகின்றன.

4. வெளிநாட்டுப் படுகடனில் 37.3.% ஐ. அ. நாடுகள், ஜப்பான் ஆகிய இரு நாடுகளிலுமிருந்து பெறப்பட்டுள்ளன.

★ பின் வருவோர் தீர்வையற்ற கடைகளிலிருந்து (Duty Free Shops) பொருட்களைக் கொள்வனவு செய்யும் அருகதை உடையவர்கள்:—

1. பிறநாட்டு உல்லாசப் பயணிகள்
2. இராஜதந்திரிகள்
3. திட்டங்களில் பணிபுரியும் வெளிநாட்டவர்.
4. பிறநாடுகளில் தொழில் புரிந்துவிட்டு மீளவரும் இலங்கையர்
5. இலங்கைக்கு தற்காலிக விருந்தினராக வரும் இலங்கையர்
6. ஆறு மாதத்துக்கு மேற்பட்ட வாச விசா (visa) பெற்று இலங்கையில் தொழில் புரியும் பிற நாட்டவர்.

# வணிகச் செய்திகள்

### ஆசிய அபிவிருத்தி வங்கி:
### (ASIAN DEVELOPMENT BANK)

அண்மையில் ஆசிய அபிவிருத்தி வங்கி தனது இருபதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. இந்த இருபது ஆண்டு காலத்துக்குள் இவ்வங்கி தனது உறுப்பினரான வளர்முக நாடுகளுக்கு ஐ. அ. $ 18 பி. பெறுமானமுள்ள உதவிகளை 800 கருத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக வழங்கியுள்ளது.

இவ்வங்கியின் அண்மைக்கால நிகழ்வுகளில் மக்கள் சீனக் குடியரசைத் தனது உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டமையும், இந்தியா இவ் வங்கியிடமிருந்து கடன்களைப் பெற்றுக்கொள்ளத் தீர்மானித்தமையும் முக்கியமானவையாக அமைகின்றன.

பொருளாதார அபிவிருத்தியில் தனியார் துறையினரின் பங்களிப்பை அதிகரிப்பதை இவ்வங்கி தற்போது ஊக்குவித்து வருகின்றது. இதற்காக தொழில் முயற்சிகளின் ஒப்புரவு மூலதனத்தில் இவ்வங்கி அதிக அளவுக்கு பங்கேற்க (Equity Participation) முன்வந்துள்ளது. அத்துடன் அரசாங்கங்களின் உத்தரவாதத்தைப் பெற்றுக்கொள்ளாமலே தனியார் துறைக்குக் கடன்களை வழங்க வங்கி தயாராக உள்ளது.

நிச்சயமற்ற அரசியல் சூழ்நிலை, பாரிய சனத் தொகை வளர்ச்சி என்பவற்றால் அல்லலுறும் ஆசிய பிராந்தியத்தைச் சேர்ந்த உறுப்பு நாடுகளின் தனிநபர் வருமானத்தை உயர்த்துவதற்கு வங்கி தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளது.

இவ் வங்கியில் தற்போது 47 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

### ரேப்பியா (REPPIA)

1983-ம் ஆண்டின் இனக்கலவரத்தைத் தொடர்ந்து பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட அவசரகால விதிகளின்படி ஆட்கள், ஆதனங்கள், கைத்தொழில்கள் என்பவற்றைப் புனரமைக்கும் அதிகாரசபை (Rehabilitation of Persons, Properties and Industry Authority) ஏற்படுத்தப்பட்டது. இவ்விதிகளின்படி பாதிக்கப்பட்ட ஆதனங்கள், கைத்தொழில்கள், வியாபார முயற்சிகள் யாவும் அரசுடமை ஆக்கப்பட்டன (Vested in State). இவற்றை திருத்துவதற்கும், புனரமைப்பதற்கும் பல்வேறு வசதிகள் வழங்கப்பட்டன. இவ்வாறு திருத்தம் மேற்கொள்ளபடாது அல்லது நிறைவேற்றப்படாது இருந்தவையும் சட்டபூர்வ குடியிருப்பாளரிடம் மீளவும் கையளிக்கப்படாது இருந்தவையுமான ஆதனங்கள், கைத்தொழில்கள் வியாபார முயற்சிகள் என்பவை தவிர்ந்த ஏனையவற்றின் உரிமைகள் அவற்றின் முன்னைய உரித்தாளிகட்கு வழங்கப்பட்டன. இச்சபையின் செயல்பாடுகளின் காரணமாக அழிவுகளை வேகமாக சீர் செய்யக்கூடியதாக இருந்தது. இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து இச்சபையை இடையறு வழித் தொடர்பு கொண்ட (Perpetual Succession) கூட்டமைக்கப்பட்ட நிலையமாக (Body corporate) அமைக்கும் நோக்குடன் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதுவே ரேப்பியா சட்டம் என அழைக்கப்படுகின்றது.

**இயக்குனர்கள்:-**

மந்திரியால் நியமிக்கப்பட்ட 5 இயக்குனர்களை இச்சபை கொண்டிருக்கும். இவர்களுள் ஒருவரை சபையின் தலைவராக மந்திரி நியமிப்பார்.

**கடமைகள்:-**

காலத்துக்கு காலம் மந்திரியால் வழங்கப்படும் பொதுவானதும் சிறப்பானதுமான பணிப்புகளை செயல்படுத்துதல் இயக்குனர்களின் கடமையாகும்.

**தொழிற்பாடுகள்:-**

(i) பாதிக்கப்பட்டவர்களுக்கு பணக் கொடைகளையும் ஏனைய உதவிகளையும் வழங்கி அவர்களை புனரமைத்தல்.

(ii) பாதிக்கப்பட்ட ஆதனங்களை புனரமைக்க கடன்களை வழங்கல்

(iii) ஆதன உரிமையாளர் அதனை புனரமைக்க வசதியோ விருப்பமோ கொண்டிராத விடத்து குடியிருப்பாளர்அவற்றை புனரமைக்க வசதிகளை வழங்கல்.

(iv) பாதிக்கப்பட்ட ஆதனங்களை தகர்த்து அகற்றுவதற்கு ஆணையிடல்

(v) பாதிக்கப்பட்ட கைத்தொழில் அல்லது வியாபார நிலையங்களை புனரமைக்க நியாயமான நிபந்தனைகளுடன் கடன் வழங்கல்

**அதிகாரங்கள்:-**

மேற்கூறிய செயற்பாடுகளை ஆற்றுவதற்காக பின் வரும் அதிகாரங்களை இச்சபை கொண்டிருக்கும்:-

1. பாதிக்கப்பட்ட அசையும், அசையாத ஆதனங்களை சுவீகரிக்கவோ வாடகைக்கு விடவோ, ஈடுவைக்கவோ விற்பனை செய்வதற்கோ தேவையான அதிகாரம்.
2. அரசின் உடமையாக மாறிய (Vested) ஆதனங்களை துப்பரவு செய்து மீளவும் அபிவிருத்தி செய்வதற்கான அதிகாரம்.

3. தனது கடமைகளை செய்வனே ஆற்றுவதற்காக ஒப்பந்தங்களை செய்யும் அதிகாரம்.

4. பரிசுகள், கொடைகள், நன்கொடைகள் என்பவற்றை பெற்று அவற்றை தனது தொழிற்பாடுகளுக்கு பயன்படுத்தும் அதிகாரம்.

5. கடமைகளை செவ்வனே ஆற்றுவதற்காக தேவையான ஏனைய அதிகாரங்கள்.

இச்சபையின் ஊழியர் அரச ஊழியராக கருதப்படுவர்.

நிதி:-

ரேப்பியா நிதியென ஒருநிதி உருவாக்கப்படும். அவசரகால நிலைமைகளின் கீழ் ஏற்படுத்தப்பட்ட முன்னைய சபையின் நிதிகள் புதிய இச்சபையை சாரும். அதே விதிகளின் கீழ் ஏற்படுத்தப்பட்ட அவசரகால சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் பெயரில் உள்ள நிதிகளும் இச்சபையை சாரும். அத்துடன் நன்கொடைகளாகவும், கொடைகள், பரிசுகளாகவும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து கிடைக்கும் தொகைகட்கும் வரிவிலக்கு வழங்கப்படும்.

## மக்கள் வங்கி திருத்தச் சட்டம்.

1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க சட்டத்தின் வாயிலாக மக்கள் வங்கி ஏற்படுத்தப்பட்டது. இச்சட்டத்துக்கான திருத்தம் 1986ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க மக்கள் வங்கி (திருத்த) சட்டத்தின் வாயிலாக கொண்டுவரப்பட்டுள்ளது. 1986-09-24ல் ஜனாதிபதியின் இசைவை பெற்ற இச்சட்டத்தின்வாயிலாக மக்கள் வங்கியின் நோக்கங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. வங்கியின் நோக்கம் பின்வருமாறு அமையும்.

1. இலங்கையின் கூட்டுறவு இயக்கத்தையும், கிராமிய வங்கியியலையும் விவசாயத்தையும், கைத்தொழிலையும் அபிவிருத்தி செய்வதற்கு உதவுதல்

2. வர்த்தக வங்கி, நகைஈடு பிடிப்போன், வியாபார வங்கி (Merchant Bank) தொழில்களை மேற்கொள்வதற்கான அதிகாரம்.

இந்த நோக்கங்களை எய்துவதற்காக திருத்தச் சட்டத்தின் 5-ம் பிரிவு வங்கிக்கு பரந்த அதிகாரங்களை வழங்குகின்றது. அத்துடன் வழங்கப்பட்ட கடன்களை மீளப் பெறுவதற்கான ஏற்பாடுகளும் விரிவாக்கப்பட்டுள்ளன.

## ஊழியர் சேமலாப நிதி E. P. F.

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க சட்டத்தின் வாயிலாக ஊழியர் சேமலாபநிதி உருவாக்கப்பட்டது. தொழிலாளர் நலன் கருதி ஆக்கப்பட்ட பல்வேறு சட்டங்களுள் இச்சட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது. ஒழுங்கு படுத்தபடாத துறை சார்ந்த தொழிலாளர்களுக்கு பணரீதியான நலன்களைப் (Monetary Benifits) வழங்கிய சட்டங்களுள் இது முதன்மையானதாகும்.

இச்சட்டத்துக்கு அண்மையில் சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. 1985-ம் ஆண்டின் 1-ம் இலக்க ஊழியர் சேமலாபநிதி [திருத்தச்] சட்டத்தின் வாயிலாகவே இத்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. இத்திருத்தங்கள் பின்வரும் விளைவுகளை ஏற்படுத்தும்:-

1. ஊழியரிடமிருந்து உதவு தொகையையும் தனது பங்களிப்பையும் தொழில் கொள்வோர் உரிய காலத்தில் நிதிக்கு செலுத்த தவறினால் அவரிடமிருந்து தண்டப்பணம் அறவிடப்படும். இத்தண்டப்பணத்தின் தொகையில் ஒருபகுதி பாதிக்கப்பட்ட உறுப்பினர் க/கில் வரவு வைக்கப்படலாம்.

2. இந்நிதியில் காணப்படும் பணத்தொகையை மூலச்சட்டத்தின்படி பின்வரும் சந்தர்ப்பங்களிலேயே உறுப்பினர் ஒருவர் மீளப்பெறலாம்.

   அ. அவர் 55 வயதை அடைந்த பின்பு

   ஆ. அரசாங்க சேவை. உள்ளூராட்சி சேவை, மாவட்ட சேவை, ஏனைய உள்ளூராட்சி சபைகளின் சேவைகளில் ஒய்வூதியம் பெறக் கூடிய புதிய நியமனத்தை பெற்றிருந்தால்.

   இ. இதன் பின்னர் எதுவித தொழிலும் ஆற்றமுடியாதவர் என வைத்தியர் ஒருவரால் அத்தாட்சி படுத்தப்பட்டிருந்தால்.

இவற்றுள் 3ஆவது மார்க்கத்தை பயன்படுத்தி பலர் உண்மைக்கு புறம்பான விதத்தில் வைத்திய அத்தாட்சி பத்திரங்களை கையளித்து தமது பணத்தொகையை மீளப்பெற்றுவந்தனர். இந் நிலையைத் தடுத்து நிறுத்துவதற்காக திருத்த சட்டத்தில் ஏற்பாடுகள் காணப்படுகின்றன. சமர்ப்பிக்கப்படும் மருத்துவ சான்றிதழ் உண்மைக்கு புறம்பானது என தொழில் ஆணையாளர் கருதுமிடத்து வைத்தியர் சபை ஒன்றினாலோ அல்லது அரச மருத்துவர் ஒருவராலோ அவர் மறுபரிசிலனை செய்யப்படவேண்டும் என ஆணையிடலாம். அத்தாட்சி பத்திரம் தவறானது என நிரூபிக்கப்படுமாயின் அத்தகையோர் பின்னர் வழங்கும் சான்றுகளை ஆணையாளர் ஏற்காதுவிடலாம்.

3. மாதாந்த தொகைகளை உரிய திகதியில் செலுத்த தவறுவோரிடமிருந்து பின்வரும் அடிப்படையில்

தண்டம் அறவிடப்பட திருத்த சட்டம் ஏற்பாடு களை வழங்கியுள்ளது.

| | | |
|---|---|---|
| அ. | 10 நாட்களுக்கு உட்பட்ட தாமதத்துக்கு | 5% |
| ஆ. | 10 ,, மேல் ஒரு மாதத்துக்குள் | 15% |
| இ. | 1 மாதத்துக்கு மேல் 3 ,, | 20% |
| ஈ. | 3 ,, மேல் 6 ,, | 30% |
| உ. | 6 ,, ,, 1 வருடத்துக்குள் | 40% |
| ஊ. | 1 வருடத்துக்கு மேல் | 50% |

(4). ஊழியர் என்ற பதத்துக்கு விரிவான விளக்கம் தரப்பட்டுள்ளது. தொழில் பயிலுநர், ஏனைய சேவைகளை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவோர் உட்பட சகல ஊழியரையும் சட்டத்தின் புதிய திருத்தம் ஊழியர் சேமலாபநிதி திட்டத்தின் நலன்களை பெற வாய்ப்பு அளிக்கின்றது. அதேபோல் தொழில் தருநர் என்ற பதத்துக்கும் விரிவான விளக்கம் அளிக்கப்பட்டு கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களாயின் அதன் தலைவர், தொழிலாளரும், பங்குடமையாயின் அதன் முகாமை பங்காளர், முகாமையாளர் ஆகியோரும் உள் அடக்கப்படுகின்றனர்.

பொதுவில் ஊழியர் சேமலாப நிதி சட்டத்தில் காணப்பட்ட இடைவெளிகளை இட்டு நிரப்பும் வகையில் திருத்த சட்டம் அமைந்துள்ளது எனலாம்.

## தனியார் பேருந்து சேவை

தனியார் பேருந்துகட்கென தனியாக பஸ் நிலையம் ஏற்படுத்தி தந்திருக்கும் உள்ளூராட்சி நிறுவனங்கள் பேருந்து உரிமையாளரிடமிருந்து கட்டணம் ஒன்றை அறவிடும் உரிமையை வழங்கும் விதத்தில் 1983 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தனியார் பேருந்து சபைச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

பயணிகளுக்கான உறைவிடம், நேரம் கணிப்போருக்கான அலுவலகம் என்பவற்றையும் பேருந்து நிலையத்தில் நீர், மின்சாரம், மலசலகூட வசதிகள் என்பவற்றையும் வழங்கியுள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் ஒவ்வொரு பேருந்துக்கும் மாதத்துக்கு 100/- க்கு மேற்படாத கட்டணத்தை அறவிடலாம். பேருந்து நிலையத்துக்கான காணியை மட்டும் உள்ளூராட்சி நிறுவனம் வழங்கியிருந்து மேற் கூறிய வசதிகளை பேருந்து இயக்குனர் சங்கம் வழங்கியிருந்தால் மாதத்துக்கு 50/- க்கு மேற்படாத கட்டணத்தை மட்டும் பேருந்து ஒன்றுக்கு பெற்றுக் கொள்ளலாம்.

## விற்பனைப் புரள்வு வரி

1981 ஆம் ஆண்டின் 69 ம் இலக்க விற்பனை புரள்வு வரி சட்டத்துக்கு திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதன்படி

(1) முந்திய காலாண்டில் விற்பனையாக கருதப்பட்டு வரிசெலுத்தப்பட்ட தொகைகளில் ஒரு பகுதி அறவிட முடியாத கடனாக அமையுமானால் அதற்கு சமமான தொகையை அதற்கு பிற்பட்ட காலாண்டு விற்பனை தொகையிலிருந்து வியாபாரி கழித்துவிடலாம். எனினும் இவ்வாறு கழித்து விடப்பட்ட தொகைகள் பின்னர் அறவிடப்பட்டிருக்குமாயின் அதனை அடுத்த காலாண்டு விற்பனை தொகையுடன் சேர்த்துக்கொள்ளல் வேண்டும்.

(2) வரிமதிப்பீட்டாளரால் விடுக்கப்பட்ட அறிவித்தல்களை எவரேனும் உதாசீனம் செய்வாராயின் அவருக்கு ரூ. 50,000/ க்கு மேற்படாத தண்டத்தை விதிக்கலாம். விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கு உட்பட்ட தகவல்களை குறிப்பிட்ட கால எல்லைக்குள் வழங்குமாறு நிர்ப்பந்திக்கவும் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் தனது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சூழ்நிலை காரணமாகவே தன்னால் அத்தகவல்களை வழங்கமுடியாது இருந்தது என ஒருவர் நிரூபிக்க முடியுமாயின், விதிக்கப்பட்ட தண்டத்தை தள்ளுபடி செய்யவும் ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. மேலும் சட்டத்தின் இப் பிரிவின்படி தண்டம் விதிக்கப்பட்ட ஒருவருக்கு எதிராக வழக்கு தொடரப்படமாட்டாது.

(3) இலங்கைக்கு வெளியே உற்பத்தி செய்யப்படும் எப்பொருளையேனும் இறக்குமதி செய்யும் எவரும் சுங்க தீர்வைக்கு புறம்பாக விற்பனை புரள்வு வரியை செலுத்த வேண்டும்.

## ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டுச் சட்டம்

1969-ம் ஆண்டு 1ம் இலக்க ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டு சட்டத்துக்குப் 1985-ம் ஆண்டின் 48ம் இலக்க திருத்த சட்டத்திற்கும் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன்படி

(1) ஏற்றுமதி அல்லது இறக்குமதிக்கு அனுமதி சீட்டு வழங்கப்பட்டிருப்பின் அதில் காட்டப்பட்டுள்ள பெறுமதி தரம் என்பவற்றுக்கு முரண்படாத விதத்திலேயே பொருட்கள் நாட்டுக்குள் கொண்டு வரப்படலாம் அல்லது ஏற்றுமதி செய்யப்படலாம்.

2) விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுபாடுகளை மீறி தரம் குன்றிய பொருட்களை இறக்குமதி செய்யும் இறக்குமதியாளர்களின் பெயர், விலாசம், மற்றும்தகவல்கள் அரசவர்த்தமானியில்பிரசுரிக்கப்படும். தேசியபொருளாதாரத்தினதும், பொது சுகாதாரத்தினதும் நலன்களை கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

# இலங்கையில் காசோலைகள் தீர்க்கப்படும் நடைமுறை
# ( Cheque Clearing Arrangements in Sri Lanka)

கு. கல்வனை சேயோன்

## அறிமுகம்

வங்கிகளின் நாளாந்தப் பணிகளில் காசோலைகளைத் தீர்ப்பனவு செய்தல் முக்கியமானதாகும். அத்தீர்ப்பனவுத் தொழிற்பாடு எவ்வாறு நடைபெறுகிறதென விபரித்து அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள இயந்திர மயமாக்கப்பட்ட தீர்ப்பனவு முறை பற்றி விளக்குதலே இக்கட்டுரையின் நோக்கம்.

## காசோலைத் தீர்ப்பனவு என்றால் என்ன?

கடன்களைத் தீர்ப்பதற்கு வங்கி வைப்புகள் உகந்த சாதனமாக அமைந்துள்ளன. ஒருவர் தான் மற்றவருக்குச் செலுத்த வேண்டிய தொகையை இறுப்பதற்கு தனது வங்கியில் தான் வைப்பிலிட்டுள்ள பணத்தை மீளப் பெற்று அதனை மற்றவருக்கு கையளிக்கலாம். அவர் தனது வங்கிக்குச் சென்று அப்பணத்தைத் தனது கணக்கில் இடுவார். இது சிரமம் மிக்க தொழிற்பாடாக அமையும். கால விரயத்தையும் ஏற்படுத்தும். இத் தொழிற்பாட்டின் நிகரவிளைவாக அமைவது ஒருவரது உடமையாக இருந்த வங்கி வைப்பு வேறொருவரது உடமையாக மாற்றப்படுவதேயாகும். இதே செயற்பாட்டின் விளைவை அவர்கள் வேறொரு வகையிலும் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

பணம் செலுத்த வேண்டியவர் தனது வங்கிக் கணக்கில் ஒரு காசோலையைப் பிறப்பித்து பணம் பெற வேண்டியவருக்கு அதனைக் கையளிப்பதன் மூலம் தனது கடனை அவர் தீர்த்துக் கொள்ளலாம்.

## உள்ளகக் காசோலைகள்
**(Transfer Cheques)**

இந்நிலையில் இருவரது கணக்குகளும் ஒரே வங்கி கிளையில் காணப்படுமாயின் அக் காசோலை உள்ளகக் காசோலையாக அமையும். இரு கணக்குகட்கும் இடையே மேற்கொள்ளப்படும் எதிர்ப் பதிவுகளின் மூலம் இத்தகைய காசோலை தீர்ப்பனவு செய்யப்படும்.

எனினும் வங்கியின் நாளாந்த செயற்பாட்டில் பல்வேறு வங்கிகள் மீதும் கிளைகள் மீதும் பிறப்பிக்கப்பட்ட காசோலைகள் வாடிக்கையாளரால் வைப்பிலிடப்படுகின்றன.

## உள்ளூர்த் தீர்ப்பனவு
**(Local Clearing)**

அதே நகரத்தில் உள்ள பிறிதொரு வங்கிக் கிளையின் மீது காசோலை பிறப்பிக்கப் பட்டிருக்குமாயின் அது உள்ளூர் தீர்ப்பனவுக் காசோலை எனப்படும். ஒரே நகரத்கில் இரண்டு அல்லது மூன்று வங்கிக் கிளைகள் மட்டும் காணப்படுமாயின் ஒரு வங்கியின் மீது பிறப்பிக்கப்பட்டு வேறொரு வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ள காசோலைகள் பட்டியலிடப்பட்டு வங்கிகளிடையே பரிமாறப் படுகின்றன. இத்தகைய பரிமாற்றம் பொதுவாக நாளொன்றுக்கு இரு தடவை மேற்கொள்ளப்படுகின்றது. நாள் முடிவில் காணப்படும் நிகர மீதி கொழும்பில் உள்ள தனது பிரதான கிளை ஒன்றின் மீது பிறப்பிக்கப்படும் வங்கி ஆணையொன்றை (draft) வழங்குவதன் மூலம் தீர்க்கப்படுகின்றது.

சற்றுப் பெரிய நகரங்களில் பல வங்கிகளும் கிளைகளும் காணப்படும். இந் நிலையில் அந் நகரிலுள்ள வங்கிகளுட் தலையானது தீர்வகமாகப் பணியாற்றும். யாழ்ப்பாண நகரத்தில் வரைவுள்ள இலங்கை வர்த்தக வங்கி (Commercial Bank of Ceylon Ltd) இப்பணியை மேற் கொள்கின்றது.

ஒவ்வொரு நாளும் குறித்த வேளையில் தீர்வகத்தில் நகரிலுள்ள அனைத்து வங்கிகளின் பிரதிநிதிகளும் கூடுவர் ஏனைய வங்கிகளின் மேல் பிறப்பிக்கப் பட்டு தமது கிளையில் வைப்புச் செய்யப்பட்டுள்ள காசோலைகளை வெவ்வேறாகத் தரம் பிரித்து அவர்கள் தம்முடன் எடுத்துச் செல்வர். தீர்வகப் பிரதிநிதியின் மேற்பார்வையின் கீழ் அவர்கள் அங்கு காசோலைகளைப் பரிமாறிக் கொள்வர். நாள் முடிவில் உள்ள நிகர மீதி கொழும்பிலுள்ள தமது கிளை ஒன்றின் மீது அவர்களால் பிறப்பிக்கப்படும் வங்கியாணை மூலம் தீர்க்கப்படும்.

## பிற நகர் காசோலைகள்
**(Out Station Cheques)**

பிற நகரத்திலுள்ள வேறொரு வங்கியின் மீது பிறப்பிக்கப்பட்ட காசோலைகளையும் வாடிக்கையாளர்

தமது கணக்குகளில் இடக் கூடும். இவற்றைத் தரம் பிரித்து அந் நகரில் உள்ள தமது கிளைக்கூடாக வங்கிகள் தீர்ப்பனவு செய்து கொள்ளும்.

## மத்திய தீர்ப்பனவுக்கான காசோலைகள்
**(Cheques for Central Clearing)**

தமது கிளைகள் காணப்படாத பிறிதொருநகரிலுள்ள வங்கிகள் மீதும், கொழும்பிலுள்ள வங்கிகள்மீதும் பிறப்பிக்கப்பட்டு தமது வங்கியில் வைப்பிலிடப்பட்ட காசோலைகளை வங்கிகள் வேறாகத் தரம் பிரித்து அவற்றைத் தமது தலைமை அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கும். இவ்வாறு அனைத்துக் கிளைகளிலுமிருந்தும் கிடைக்கப் பெறும் காசோலைகளை தலைமை அலுவலகத்திலுள்ள மத்திய தீர்வனவுப் பகுதி தரம் பிரிக்கும். இவற்றைவிட கொழும்பில் மட்டுமே அலுவலகங்களைக் கொண்ட 22 வங்கிகளும் தற்போது காணப்படுகின்றன. இவற்றின் மீது பிறப்பிக்கப்பட்ட காசோலைகளும் வெவ்வேறு வங்கிகளில் வாடிக்கையாளரால் வைப்பிலிடப்பட்டிருக்கும்.

## கொழும்பு தீர்வகம்
**(Colombo Clearing House)**

இத்தகைய காசோலைகள் தீர்ப்பனவுக்கு உதவுவது மத்திய வங்கியால் நடாத்தப்படும் கொழும்புத் தீர்வகமே. மத்திய வங்கி அமைக்கப்பட முன்னர் தற்போது இந்திய அரச வங்கி (State Bank of India) என அழைக்கப்படுவதும் முன்னர் இந்தியப் பேரரசு வங்கி (Imperial Bank of India) என அழைக்கப்பட்டதுமான வங்கி இப்பணியை மேற்கொண்டிருந்தது. பணவியல் சட்டத்தின்படி (Monetary Law Act) தீர்வக வசதிகளை ஏற்படுத்தித் தருவது மத்திய வங்கியின் பணியென வரையறுக்கப்பட்டது. 1977 வரை குறைந்த எண்ணிக்கை உள்ள வங்கிகளே காணப்பட்டமையால் இப்பணியை மத்திய வங்கி சிரமமின்றி மேற்கொண்டது அவ்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட கட்டற்ற பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாக வங்கிகளில் கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கையும் பரிமாணமும் அதிகரித்தன. அதே வேளையில் அந்நியநாட்டு வங்கிகள் இங்கு கிளைகளை ஆரம்பிக்கவும் அனுமதிக்கப்பட்டன. அத்துடன் ஏற்கனவே இங்கே கிளைகளைக் கொண்டிருந்த அந்நிய வங்கிகளின் செயற்பாடுகள் மீது விதிக்கப்பட்டிருந்த வரையறைகளும் நீக்கப்பட்டன. இதனல் காசோலைப் புழக்கம் வெகுவாக அதிகரிக்கலாயிற்று.

## கொழும்புத் தீர்வகம் செயற்படும்விதம்
**Colombo Clearing House (How it Works)**

மத்திய வங்கியின் தலைமையில் நடைபெறும் தீர்வகச் செயற்பாடும் முன்னர் விளக்கப்பட்ட மாவட்ட நகர தீர்வகச் செயற்பாடுகளை ஒத்தனவே. இங்கும் இரு தீர்ப்பனவுகள் இடம் பெறுகின்றன. காலை 8.00 மணிக்கும் 11.30 க்கும் இவை இடம் பெறுகின்றன. ஆரம்பத்தில் செலுத்துமதித் தீர்ப்பனவு (Settlement Clearing) இடம் பெறும். முன்னைய தீர்ப்பனவில் ஒப்படைக்கப்பட்டு பண மின்மையாலோ அல்லது வேறு தொழில் நுட்பக் காரணங்கட்காகவோ மறுக்கப்பட்ட காசோலைகள் உரிய வங்கிகளிடம் ஒப்படைக்கப்படுகின்றன. பின்னர் முதலாம் தீர்ப்பனவு ஆரம்பிக்கும். முதல் நாள் கொழும்புக் கிளைகளில் வைப்பிலிடப்பட்ட காசோலைகளும், பிற ஊர் கிளைகளில் முன்னைய நாட்களில் வைப்பிலிடப்பட்டு தபால் மூலம் மத்திய தீர்வகத்துக்குக் கிடைத்த காசோலைகளும் முதலாம் தீர்ப்பனவில் தீர்க்கப்படும்.

காலை 11.30க்கு இரண்டாம் தீர்ப்பனவு இடம் பெறும். பொதுவாக இத்தீர்ப்பனவில் கையாளப்படும் காசோலைகளின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கும். நாள் முடிவில் காணப்படும் இறுதி மீதி ஒவ்வொரு வங்கியும், மத்திய வங்கியுடன் தான் கொண்டுள்ள நடைமுறைக் கணக்கில் காசோலைகளைப் பிறப்பிப்பதன் வாயிலாகத் தீர்க்கப்படும்.

## அனுகூலங்கள்

காசோலைகள் இவ்வாறு தீர்க்கப்படுவதனல் வாடிக்கையாளருக்கும் வங்கிகட்கும் பலவித அனுகூலங்கள் கிட்டுகின்றன. தீர்வகம் காணப்படாவிடின் ஒவ்வொரு வங்கியும் ஏனைய ஒவ்வொரு வங்கியுடனும் நடைமுறைக் கணக்கினைக் கொண்டிருத்தல் வேண்டும். தம் மீது பிறப்பிக்கப்பட்டு ஏனைய வங்கிகளிடம் வைப்பில் இடப்படக்கூடிய காசோலைகளின் பெறுமதியை ஈடு செய்யக் கூடிய பணம் இக் கணக்குகளில் காணப்படல் வேண்டும். இதனல் பெரும் தொகைப்பணம் வெறுமனே முடக்கப்படநேரும். மத்திய வங்கி ஊடாக தீர்வக ஏற்பாடுகள் காணப்படுவதனல் ஒவ்வொரு வங்கியும் மத்திய வங்கியுடன் கணக்கு ஒன்றினைக் கொண்டிருந்தால் போதுமானது மேலும் நிகர மீதிகள் மட்டும் தீர்க்கப்பட வேண்டியுள்ளதால் அக் கணக்கில் பாரிய தொகைகளை முடக்கவேண்டிய அவசியமும் இல்லை இதனல் செலவு மீதப்படுத்தப்படுவதுடன் சிரமமும் குறைக்கப்படுகின்றது அத்துடன் தமது பண நிலுவைகளை வங்கிகள் சிக்கனமாகப் பயன் படுத்தவும் முடிகின்றது.

## தீர்வகத்தை இயந்திரமயமாக்கல்
**Automation of the Clearing House**

காலப்போக்கில் கொழும்பு தீர்வகத்தின் வேலைப்பளு அதிகரித்துச் சென்றுள்ளது. இதனை பின்வரும் அட்டவணை விளக்கும்;-

| ஆண்டு | ரூ. மி. வங்கித் தீர்ப்பனவு மாதாந்தச் சராசரி |
|---|---|
| 1975 | 2.254.3 |
| 1977 | 3,032.2 |
| 1980 | 6.046 9 |
| 1982 | 12.979.9 |
| 1984 | 18,871.1 |
| 1985 | 19.569.3 |
| 1986 | 21,635.5 |

மூலம்: மத்தியவங்கி
மாதாந்த அறிக்கை ஜனவரி —87

இதன் காரணமாக கொழும்புத் தீர்வகத்தை இயந்திரமயமாக்க மத்திய வங்கி முற்பட்டுள்ளது. இதனால் பின் வரும் அனுகூலங்கள் கிட்டும்:—

(1) கொடுக்கல் வாங்கல்கள் விரைவில் தீர்க்கப் பட முடிவதனுல் வர்த்தக நடவடிக்கைகள் வேகம் காணும்.

(2) அதிகரித்த காசோலை கொடுக்கல் வாங்கல் களால் கடனுக்கம் அதிகரிக்கும்.

(3) காசோலைகள் விரைவாகத் தீர்க்கப்படமுடிவதனுல் மக்களுக்கு காசோலை பயன்பாட்டில் நம்பிக்கை அதிகரித்து ரொக்கப் பணப்பாவனை குறைவுறும்.

## புதிய வகைக் காசோலைகள்

ஆனுல் இம் முறையைச் செயற்படுத்துவதற்கு சகல வங்கிகளும் ஒரே சீரான காசோலைகளைப் பயன்படுத்துதல் அவசியமானதாகும். காசோலையின் கீழ் மூலையில் காந்தமையினுல் (Magnetic ink) எண்கள் பொறிக்கப்படல் வேண்டும். காசோலையின் தொடர் இலக்கம், வங்கிகளையும் கிளைகளையும் இனம் காட்டும் இலக்கங்கள், கணக்கு இலக்கம், தொகை என்பவை கணனி மொழியில் (Computer Language) பொறிக்கப்படல் வேண்டும். இத்தகவல்களை காசோலைகளை வைப்பில் ஏற்கும் வங்கியே பொறித்தல் வேண்டும். மத்திய தீர்வகத்தில் இக்குறிப்புகளை வாசிக்கும்/தரம் பிரிக்கும் (Reading/Sorting) பொறி காணப்படும். சங்கேத மொழியிலுள்ள குறிப்புகளை இப்பொறி உணர்ந்து பிரதம கணனி (Main Computer) இடம் அவற்றை ஒப்புவிக்கும் அவற்றைக் கொண்டு பிரதம கணனி அன்றைய தீர்வக அறிக்கையைத் தயாரிக்கும்.

## அனுகூலங்கள்

இதனுல் பல அனுகூலங்கள் ஏற்படலாம். இரண்டாம் தீர்வனவு சற்றுக் காலம் தாழ்த்தி மேற்கொள்ளப் படலாம் இதனுல் அன்று வைப்பிலிடப்பட்ட காசோலைகளும் கிளைகளிலிருந்து அன்றைய தபாலில் கிடைக்கப்பட்ட காசோலைகளும் அன்றே தீர்ப்பனவு செய்யக் கூடியதாக இருக்கும்.

## செலவு

இயந்திர மயமாக்கப்பட்ட தீர்வகத்தை அமைக்க பெருமளவு செலவு ஏற்பட்டுள்ளது. இவற்றை வங்கிகள் தம்மிடையே பகிர்ந்து கொண்டமையால் இச் செயன் முறையின் அனுகூலத்தை அவை தற்போது அனுபவிக்கக் கூடியதாகவுள்ளது.

## தற்போதைய நிலை

ஜுலை 15-ம் திகதி முதல் இத்திட்டம் செயற்படுததப்பட்டு வருகின்றது. தற்போது இதுவரை காலமும் வழக்கிலிருந்த காசோலைகள் வழக்கொழிக்கப் பட்டுள்ளன. கணனிகளால் இனங்காணப்படக் கூடிய புதிய காசோலைகள் பாவனைக்கு விடப்பட்டுள்ளன. இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்ட காசோலைகளை இனிமேல் கருமபீடத்திலிருநது பணம் மீளப் பெறுவதற்கு மட்டுமே பயன்படுத்த முடியும்.

புதிய காசோலைகள் கணனிகளால் கையாளப் படவுள்ளதால் அவற்றின் பயன்பாடுக்கென ஒதுக்கப் பட்ட இடத்தில் எதுவித குறியீடுகளும் வாடிக்கையாளராலோ பிறராலோ இடப்படலாகாது. அத்துடன் காசோலைகள் மடிக்கப்பட்டோ வேறு வகையில் சிதைக்கப்பட்டோ இருப்பின் அவற்றைக் கணனி நிராகரிததுவிடும். எனவே காசோலைகளை எவரும் பக்குவமாகவே கையாள்வது அவசியம். இந்த விதிகளை வங்கிகள் தமது வாடிக்கையாளருக்கு அறிவுறுத்தி வருகின்றன.

இதுவரை காலமும் உள்ளூர் அரச வங்கிகளான இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும் தமது வாடிக்கையாளரிடமிருந்து காசோலைப் புத்தகங்கட்கான கட்டணத்தை அறவிடாது இலவசமாகவே வழங்கி வந்தன அரசுக்குச் செலுத்த வேண்டிய முத்திரை வரியை மட்டுமே அவை அறவிட்டு வந்தன. புதியவகை காசோலைப் புத்தகங்களை வெளியிட பெருமளவு பணச்செலவு ஏற்படுமாகையால் அச்செலவின் ஒரு பகுதியை அவை வாடிக்கையாளரிடமிருந்து அறவிடத் தீர்மானித்துள்ளன.

## முடிவுரை

வங்கி வாடிக்கையாளருக்கு தற்போது ஒரு நவீன வங்கியியல் தொழில்நுட்பம் அறிமுகம் செய்து வைக்கப் படுகின்றது. ஏனைய நாடுகளின் வங்கியியல் சேவைகளில் புகுத்தப்பட்டுள்ள தொழில்நுட்ப மாற்றங்களைப் பொறுத்தவரை இது மிக அற்பமானதே. புதியன புகும் போது சிற்சில அசௌகரியங்களும் சிரமங்களும் ஏற்படுவது தவிர்க்க முடியாததே. விரைவில் இப்புதிய தொழில்நுட்பத்தின் நற் பலன்களை அனைவரும் அனுபவிக்கக் கூடியதாக இருக்கும்.

# மாணவர் மஞ்சரி

## பீ. ரீ. என். (B. T. N.) இலக்கம்

"பிரூஸல்ஸ் டரிவ் நொமன்கிளேச்சர்" (Brussels Tarriff Nomenclature) என்பதன் சுருக்கமே பீ.ரீ.என். (B.T N.) ஆகும். பிரூஸல்ஸ் இறுப்பு அட்டவணை என இதனை அழைக்கலாம். சர்வதேச வர்த்தகத்தில் ஏற்றுமதி— இறக்குமதி செய்யப்படும் பண்டங்கட்கு இறுப்பு அல்லது தீர்வை விதிக்கப்படுகின்றது. சில பொருட்கள் தீர்வையில் இருந்து விலக்குப் பெறுகின்றன. வேறு சில பொருட்களுக்கு ஏற்றுமதி செய்யும் நாடு தீர்வை விதித்தால் இறக்குமதி செய்யும் நாடு தீர்வை விதிப்பதில்லை. சில நாடுகளிடையே நடைபெறும் வர்க்தகத்தில் தீர்வை இடம் பெறுவதில்லை. இவ்வாறு தீர்வை விதிப்பதற்கு அல்லது விலக்களிப்பதற்கு பொருட்களை இனம் காணவேண்டியது அவசியமாகும். ஒரே வகையான பொருள் வெவ்வேறு நாடுகளால் உற்பத்தி செய்யப்படும்போது அது வேறுபட்ட பெயர்களால் அழைக்கப்படக்கூடும். ஒவ்வொரு உற்பத்தியாளரும் வேறுபட்ட "பண்டக் குறி" யைப் (Brand) பயன்படுத்தக் கூடும். இந்நிலையில் தீர்வை விதிப்பதில் குழப்பம் ஏற்படும். இதனால் வர்த்தக ஓட்டம் தடைப்பட ஏதுவாகும்.

இதனைத் தவிர்ப்பதற்காக பிரூஸல்ஸ் நகரில் ஒரு உடன்பாடு காணப்பட்டது. அதன்படி பொருட்கள் வகைப்படுத்தப்பட்டு அட்டவணை ஒன்று தயாரிக்கப்பட்டது. பொருட்களுக்கு இலக்கங்கள் வழங்கப்பட்டன. இந்த இலக்கங்களை வர்த்தக ஆவணங்களில் பயன்படுத்த நாடுகள் இணங்கின. இவ்வாறு ஒரே சீரான இலக்கங்கள் சகல நாடுகளாலும் பயன்படுத்தப்படுவதனால் அவை இலகுவில் இனங்காணப்படுகின்றன.

பிரூஸல்ஸ் இறுப்பு அட்டவணை 21 பகுதிகளையும் 100 அத்தியாயங்களையும் கொண்டது. இவற்றுள் அனைத்துப் பொருட்களும் அடக்கப்பட்டுள்ளன. உதாரணமாக 12-ம் பகுதியில் 64-67 அத்தியாயங்கள் பாத அணி, குடை என்பவை தொடர்பானதாகும். மூலப்பொருள், தரம், வடிவம் என்பவற்றைப் பொறுத்து அவற்றுக்கு இலக்கங்கள் வழங்கப்பட்டிருக்கும். இப்பொருட்கள் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்படும்போது பொருத்தமான இலக்கத்தைத் தெரிந்தெடுத்து அதனை வர்த்தக ஆவணங்களில் குறிப்பிடல் வேண்டும். இதனைக் கொண்டு அது எப்பொருள் என இலகுவாக இனங்கண்டு தீர்வை விதிப்பதற்கு அல்லது விலக்களிப்பதற்கு இலகுவாக இருக்கும்.

## ஸ்ரீலங்கா ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

**(Sri Lanka Export Credit Insurance Corporation)**

ஏற்றுமதியாளருக்கு பல்வேறு வசதிகளை இக் கூட்டுத்தாபனம் வழங்கி வருகின்றது. இவற்றை இரு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம்:

(1) கடன் உத்தரவாதங்கள் — (Guarantees)

(2) காப்புறுதி — (Insurance)

இக் கூட்டுத்தாபனம் மூன்று வகை உத்தரவாதங்களை வழங்கி வருகின்றது. அவையாவன:-

(1) கப்பலேற்றுகைக்கு முற்பட்ட உத்தரவாதம் (Pre-Shipment Guarantees)

ஏற்றுமதிக் கட்டளைகட்கிணங்க பொருட்களை உறபததி செய்வதற்குத் தேவையான பணத்தை வர்த்தக வங்கிகளிடம் இலகுவில் கடனாகப்பெறுவதற்கு இவ்வுத்தரவாதம் பெரிதும் உதவும். 1985-ன் ஈற்றில் ரூ 903.2 மி. பெறுமதியான 392 உத்தரவாதங்களும் 1986-ன் ஈற்றில் ரூ 975மி. பெறுமதி கொண்ட 421 உத்தரவாதங்களும் வழங்கப்பட்டிருந்தன.

(2) கப்பலேற்றுகைக்கு பிற்பட்ட உத்தரவாதம் (Post Shipment Guarantee)

பொருட்களை ஏற்றுமதி செய்த ஒருவர் ஏற்றுமதிப் பெறுமானததை தாமதமின்றிப் பெற்றுக்கொள்வதற்கு உதவுவதற்காக வர்த்தக வங்கிகட்கு வழங்கும் உத்தரவாதமாக இது அமைகின்றது 1985-ன் ஈற்றில் ரூ 99.4 மி. பெறுமதிகொண்ட 77 உத்தரவாதங்களும், 1986-ன் ஈற்றில் ரூ. 125.5 மி. பெறுமதி கொண்ட 83 உத்தரவாதங்களும் வழங்கப்பட்டிருந்தன.

(3) ஏற்றுமதி செயற்பாட்டு உத்தரவாதம் (Export Performance Guarantee)

குறித்த ஏற்றுமதிக் கட்டளைக்கான பொருட்கள் ஏற்றுமதியாளரால் உற்பத்தி செய்யப்படும் என்ற வகையில் இந்த உத்தரவாதம் வழங்கப்படுகின்றது 1985-ன் ஈற்றில் ரூ 96மி. பெறுமானம் கொண்ட 30 உத்தரவாதங்களும் 1986-ன் ஈற்றில் ரூ. 100.5 மி. பெறுமானமுள்ள 33 உத்தரவாதங்களும் வழங்கப்பட்டிருந்தன.

இத்தகைய வேறுபட்ட உத்தரவாதங்களை விட இக் கூட்டுத்தாபனம் ஏற்றுமதி காப்புறுதியையும் மேற்கொள்கின்றது. ஏற்றுமதிகளின் பெறுமானத்தை பெற்றுக் கொள்வதிலும் அவற்றில் எற்படக்கூடிய தாமதங்கட்கும் எதிராக இக் காபபுறுதி வழங்கப்படுகின்றது. இதனால் புதிய சந்தைகட்கும் புதிய வாடிக்கையாளருக்கும் ஏற்றுமதி செய்வதற்கு வழி ஏற்படுகின்றது. 1985-ன் ஈற்றில் ரூ. 576 மி. பெறுமானம் கொண்ட 267 பூட்கை (Policy) களும் 1986-ன் ஈற்றில் ரூ.626 7மி. பெறுமானமுள்ள 291 பூட்கைகளும் வலுவுள்ளனவாகக் காணப்பட்டன.

# உங்களுக்குத் தெரியுமா?

★ இலங்கையின் வெளிநாட்டு ஆதனங்களின் பெறுமானம் 1986 இன் ஈற்றில் 7% வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளன. 1985 இன் ஈற்றில் ரூ. 18, 367மி. ஆகக் காணப்பட்ட வெளிநாட்டு ஆதனங்கள் 1986 இன் ஈற்றில் ரூ. 17, 152 மி. ஆக வீழ்ச்சியுற்றன. இந்நிலை 1987 பெப். மாத ஈற்றில் சற்றுத் திருத்தமுற்று ரூ. 17, 393 மி. ஞக அமைந்தது.

★ எம்மால் நுகரப்படும் மொத்தவலுவில் (Energy) 69 8% வர்த்தக ரீதியற்ற மூலகங்களிலிருந்து பெறப்படுகின்றது. விறகு, விவசாயக் கழிவுகள் என்பவற்றிலிருந்து இது பெற்றுக் கொள்ளப்படுகின்றது. 1986 இல் எம்மால் நுகரப்பட்ட மொத்த வலுவில் 30. 2% மட்டுமே வர்த்தக ரீதியாகப் பெறப்பட்டிருந்தது. இவற்றுள் பெற்றோலியத்திலிருந்து 15 9%மும், எரிவாயுவிலிருந்து (L.P. Gas) 11.9% மும் பெறப்பட்டன

★ மின்வலு விற்பனவு விரைந்து அதிகரித்து வருகின்றது 1984 இல் 1. 877 மி K.W H. ஆகக் காணப்பட்ட இவ்விற்பனவு 1985 இல் 2, 061மி.K W.H. ஆகவும், 1986 இல் 2,216 மி. K.W.H ஆகவும் அதிகரித்துள்ளது.

★ 1986 இல் உருவாக்கப்பட்ட மொத்த மின் வலுவில் 41% கைத்தொழில் துறையாலும் 17% உள்ளூர்-வர்த்தக துறைகளாலும் நுகரப்பட்டன. உள்ளூராட்சி நிறுவனங்கள் 24%ஐ கொள்வனவு செய்திருந்தன. எஞ்சிய வலு தெருக்களுக்கு ஒளியூட்டல் போன்றனவற்றுக்குப் பயன் படுத்தப் பட்டது.

★ 1987 பெப். மாத முடிவில் ஒடுங்கிய பண நிரம்பல் (Narrow Money supply Mi) ரூ. 21.738 மி. ஞகவும் விரிந்த (Broad) பண நிரம்பல் ரூ 52 799 மி) ஆகவும் அமைந்திருந்தன 1986 இன் ஈற்றில் இவை முறையே ரூ. 21,179 மி. ஆகவும்ரூ. 50, 860 மி ஆகவும் காணப்பட்டன

★ தற்போதைய வங்கி விகிதம் 11% ஆகும். 1987 பெப். மாதத்தில் வங்கிகட்கிடையேயான அழைப்பு கடன் விகிதம் 9½ — 11% மாக அமைந்திருந்தது. 1986ன் ஈற்றில் இது 12— 12¾ %மாகக் காணப் பட்டது

★ ஏற்றுமதிகளின் பெறுமதிக்கும் இறக்குமதிகளின் பெறுமதிக்கும் இடைப்பட்ட வித்தியாசமே வர்த்தக மீதியாகும். இங்கு ஏற்றுமதிகள் எனும்போது உள்ளூர் (Domestic) ஏற்றுமதிகளையும் மறு ஏற்றுமதி (Re-export)களையும் உள்ளடக்கும். ஏற்றுமதி பெறுமானம் 'கலததில் இலவசம்' (f. o. b) என்ற அடிப்படையிலும், இறக்குமதிப்பெறுமானம்செலவு காப்புறுதி கேள்வி (c.i f.) என்ற அடிப்படையிலும் கணிக்கப்படுகின்றன ஏற்றுமதிப் பெறுமானத்தைவிட இறக்குமதிப்பெறுமானம் அதிகரிக்குமாயின் பாதக வர்த்தக மீதியும் (adverse balance of trade) ஏற்றுமதிப் பெறுமானம். இறக்குமதிப் பெறுமானத்தைவிட அதிகரிக்குமயின் சாதக வர்த்தக மீதியும் (favourable balance of trade) ஏற்படும். இந்தவகையில் 1974 முதல் 1983 காலப் பகுதியில் 1977 ஆம் ஆண்டைத்தவிர்ந்த ஏனைய ஆண்டுகளில் பாதக வர்த்தக மீதியே ஏற்பட்டுள்ளது. அதன் பின்னர் 1984 செப்டம்பர் மாதத்திலும், 1985 பெப். மாதத்திலும் மட்டுமே சாதக வர்த்தக மீதி ஏற்பட்டது 1986இல் எந்த ஒரு மாதத்திலும் சாதக வர்த்தக மீதி ஏற்படவில்லை. 1986 இல் ரூ 17, 867 3மி பாதக வர்த்தக மீதி ஏற்பட்டது. மாதாந்தம் சராசரியாக ரூ 1,488.9 மி. பாதக வர்த்தக மீதி காணப்பட்டது.

★ மரக்கறி, பழவகை, பாக்கு, கோப்பி, மிளகு, கறுவா, கராம்பு, சாதிக்காய், ஏலம், எள்ளு, ஏனைய எண்ணெய் வித்துக்கள, வெற்றிலை, கொக்கோ, பதனிடப்படாப் புகையிலை, பப்பெயின், கசுக்கொட்டை என்பவை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் சிறு விவசாய உற்பத்திகள் (Minor Agricultural Products) ஆகும்.

★ மேற்கு ஐரோப்பா, ஆசியா, வடஅமெரிக்கா அவுஸ்திரேலேசியா, ஏனையோர் என்ற வகுப்புக்குள் இலங்கையினுள் வரும் உல்லாசப்பயணிகளை மத்திய வங்கி தனது அறிக்கைகளில் வகைப்படுத்தியுள்ளது. வருகையின் நோக்கத்தின் அடிப்படையில் அவர்களை இன்பப் பயணிகள் (Pleasure)தொழில் முறைப் பயணிகள், நண்பர்— உறவினரிடம் விருந்தினராக வருவோர், மத— கலாசார நோக்கம் கொண்டோர், ஏனையோர் என வகைப்படுத்தியுள்ளது

★ இலங்கையின் உல்லாசப் பயணிகள் வரவு 1982ன் பின்னர் ஆண்டுதோறும் வீழ்ச்சியடைந்து சென்றுள்ளது. 1986ல் 230,106 பயணிகளே வருகை தந்தனர் 1982ல் வருகை தந்தபயணிகளின் எண்ணிக்கை 407,230 ஆகும். இது 43.5% வீழ்ச்சியை குறிக்கின்றது.

★ ஏற்றுமதிக்கான கைத்தொழில் உற்பத்திகளைமத்திய வங்கிதயாரிப்பு கைத்தொழில்கள் சுரங்க, அகழ்வு கைத்தொழில்கள் என்ற இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளது. உணவு, பானங்கள், புகையிலை; புடவையும் ஆடைகளும; இரசாயனப் பொருட்கள்;பெற்றோலியப் பொருட்கள்; தேல், ரபர்; கடதாசி, பரப், பட்டாண்டப் பொருட்கள்; சீமெந்து; இயந்திரவகை, பொறி மற்றும் மின்உபகரணங்கள்; ஆபரணங்கள்; வைரக்கற்கள் என்ற ஒன்பது பிரிவுகளாக தயாரிப்பு கைத்தொழில்கள் மேலும்வகுக்கப்பட்டுள்ளன 1985ல்தயாரிப்புகைத் தொழிற் பொருட்களின் ஏற்றுமதி ரூ 14,295மி. ஆகவும ,சுரங்க அகழ்வு கைத்தொழிற் பொருட்களின் ஏற்றுமதி ரூ. 864மி. ஆகவும் மொத்த ஏற்றுமதி ரூ. 15 160 மி ஆகவும் அமைந்தது. 1986ல் இவை முறையே ரூ 15,878 மி ரூ 1,182மி, ரூ. 17,060மி.ஞகஅமைந்தன. இவற்றுள் தயாரித்த ஆடைகளால் மட்டும் 1986ல் ரூ 9,265 மி. ஈட்டப்பட்டது. இது கைத்தொழில் ஏற்றுமதிகளில் 54.3%க்கு சமமானதாகும்.

★ வைப்புகட்கெதிரான ஒதுக்குத் தேவைகள் அண்மையில் குறைக்கப்பட்டுள்ளன. சென்றமாத இறுதி வரை கேள்வி வைப்புகட்கு 18% மாகவும், தவணை, சேமிப்பு வைப்புகட்கு 14% மாகவும் அமைந்திருந்த ஒதுக்குத்தேவைகள் தற்போது 10% மாகக் குறைக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக வங்கிகள் ஒதுக்காக முடக்கி வைத்திருந்த பணத்தொகையுள் ரூ. 1பில்லியனை தொழிலில் ஈடுபடுத்தக்கூடிய வாய்ப்புக் கிட்டியுள்ளது. வங்கிகளிடம் கையிருப்பாக (Till Cash) உள்ள பணத்தொகையையும் ஒதுக்குத் தேவையுடன் சேர்த்துக் கணிப்பது பற்றியும் மத்தியவங்கி ஆலோசித்து வருகின்றது.

★ வங்கி வைப்புகட்கு எதிரான காப்புறுதித் திட்டம் எதிர்பார்த்த அளவு வரவேற்பைப் பெறவில்லை. இத்திட்டத்தில் சேர்வது கட்டாயமாக்கப்படாமையால் இன்றுவரை இத்திட்டத்தில் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட முதலீட்டுக்கடன் வங்கி (சம்பத் வங்கி) மட்டுமே சேர்ந்துள்ளது. இலங்கையின் மிகப்பெரும் வங்கிகளான மக்கள் வங்கியும், இலங்கைவங்கியும் இத்திட்டத்தில் சேருமானால் ஏனைய வங்கிகள் யாவும் அவற்றைப் பின்பற்றுமென நம்பப்படுகின்றது இத்திட்டத்தின் கீழ் ரூ. 100/- பெறுமதியான வைப்புக்கு .04 சதம் காப்புறுதிக் கட்டணமாகச் செலுத்தவேண்டும் ஒவ்வொரு வாடிக்கையாளரின் வைப்புகளையும் இத் திட்டத்தின்கீழ் காப்புறுதி செய்துகொள்ளலாம். எனினும் தனியொரு வாடிக்கையாளரின் வைப்பில் காப்புறுதி செய்யக்கூடிய உச்ச அளவு ரூ 1 லட்சம் ஆகும். வங்கி முறிவு ஏற்படுமாயின் வாடிக்கையாளரின் நலனைக் காப்பதற்கு ஏதுவாக இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

★ வங்கித்துறையால் திரட்டப்பட்டுள்ள மொத்த வைப்புகளுள் தேசிய சேமிப்புவங்கி 41% ஐ திரட்டியுள்ளது. பல்வேறுவகையான சேமிப்புவசதிகளை வழங்கிவரும் இவ்வங்கி தற்போது வர்த்தகவங்கிச் சேவைகள் சிலவற்றையும் வாடிக்கையாளருக்கு வழங்குவது பற்றி ஆலோசித்து வருகின்றது. தற்போது இவ்வங்கி 62 கிளைகளுடாகவும் 3 700 தபாலகங்கள் ஊடாகவும் சேவையாற்றி வருகின்றது. ஏனைய அரசதுறை வங்கிகளை விட இதன் கிளைப் பரம்பல் குறைவாகக் காணப்பட்டபோதும் தபாலகங்களூடாக மக்களுடன் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளத் தன்னால் முடியுமென இவ்வங்கி உறுதியாக நம்புகின்றது. தனது புதிய செயற்பாட்டுக்கென நிபுணத்துவ ஆலோசனையைப் பெற உத்தேசித்துள்ள இவ்வங்கி தபாலகங்களையும் வர்த்தக வங்கிகளைப் போல மாற்றி அமைப்பதையும் தனது கடமையெனக் கருதி வருகின்றது.

★ ரெக்னிஸ் (லங்கா) லிட். (Regnis Lanka Ltd) என்பது சிங்கர் நிறுவனத்தின் துணை நிறுவனமாகும் Singer என்ற பெயரில் உள்ள ஆங்கில எழுத்துக்களை தலைகீழாக எழுதினால் இக் கம்பனியின் பெயரைப் பெற்றுக் கொள்ளலாம் இக் கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.50 மி. ஆகும். வழங்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ 1 மி. ஆகும். குளிர்சாதனப் பெட்டிகளை உருவாக்குவதற்காக நவீன தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு இக் கம்பனி திட்டமிட்டு வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவின் (L. I. A.C.) அனுமதியையும் பெற்றுள்ளது இக் குழுவின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கான நிபந்தனைகளுள் ஒன்று, வழங்கப்பட்ட மூலதனத்தில் பிறநாட்டவரின் பங்களிப்பு 49%தை விட அதிகமாக இருத்தலாகாது என்பதாகும். பல்தேசிய நிறுவனமான ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த சிங்கர் தையல் இயந்திர நிறுவனம் (Singer Sewing Machine co.) ரூ 4 9மி. பெறுமானமுள்ள பங்குகளை இக் கம்பனியடமிருந்து கொள்வனவு செய்துள்ளது. ரூ 4.09 மி. பெறுமானமுள்ள பங்குகளை இந் நிறுவனம் பொது மக்களுக்கு விற்பனவு செய்துள்ளது. இந் நிறுவனத்தால் ஆரம்பிக்கப்படவுள்ள தொழிற்சாலை அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் உற்பத்திகளை ஆரம்பிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தொழிற்சாலையின் கருத்திட்டச் செலவு (Project Cost) ரூ 15மி. ஆகும். இத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் குளிர்சாதனப் பெட்டிகள் 'சிங்கர்' கடைகளூடாக விற்பனவு செய்யப்படும்.

★ கெவுடா (Geuda) என்றழைக்கப்படும் செயற்கை மாணிக்கக் கற்கள் இரத்தினபுரியில் தாராளமாகக் கிடைக்கின்றன. தாய்லாந்தில் இக் கற்களுக்கு கிராக்கி மிகவும் அதிகம். இக் கற்களைச் சட்ட விரோதமாக கடத்துவதன் மூலம் தாய்லாந்து வியாபாரிகள் மிகப் பெருந்தொகைப் பணத்தை உழைத்து வந்தனர் இதனால் இலங்கைக்கு பெருந்தொகை அந்நியச் செலாவணி இழப்பு ஏற்பட்டு வந்தது. இதனைக் கட்டுப்படுத்துவதற்காக அரச மாணிக்கக்கல் கூட்டுத்தாபனம் இக் கற்களை விற்பனவு செய்யும் விற்பனைத் தளம் (Trading Floor) ஒன்றினை அமைத்துள்ளது. அங்கீகாரம் பெற்ற தாய்லாந்து வர்த்தகர்கள் இத் தளத்தில் கொள்ளல் கொடுத்தலை மேற்கொள்ளலாம். கொள்வனவு அல்லது விற்பனவு விலையில் 4%தை மாணிக்கக்கல் கூட்டுத்தாபனம் சேவைக் கட்டணமாக அறவிடும். வர்த்தகர்கள் தமது கற்களின் விலைகளை குறைமதிப்பீடு செய்வதாக கூட்டுத்தாபனத்துக்கு சந்தேகம் ஏற்பட்டால், அவர்களால் வெளிப்படுத்தப்பட்ட விலையில் கூட்டுத்தாபனம் இக் கற்களை கொள்வனவு செய்யும்.

★ லீவர் பிரதர்ஸ் (இலங்கை) லிட் - Lever Bros. (Cey.) Ltd. என்பது சவர்க்கார உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பல்தேசிய நிறுவனங்களில் ஒன்றாகும். இந் நிறுவனம் ரூ100 மி. முதலீட்டுடன் இறால் வளர்ப்புத் திட்டம் ஒன்றினையும் செயற்படுத்தி வருகின்றது 1985-ல் ஆரம்பிக்கப்பட்ட இத் திட்டத்தின் உற்பத்தி இவ்வாண்டு 300 தொன்னாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு தொன்னின் பெறுமதி ரூ. 2 லட்சமாகும். லீவர் நிறுவனத்தின் 1986-ம் ஆண்டின் மொத்த வியாபாரப் புரள்வு ரூ 1 பி. என அறிவிக்கப்பட்டுள்ளது.

# நிரு டியூசன் சென்ரர்

## கோண்டாவில்

A/L 88, 89 கலை, வர்த்தக, விஞ்ஞானம்

தனித்துவம் மிக்க பட்டதாரி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்தசேவை

**O/L** அதிகாலை நேரம்
மாலை நேரம்
பகல் முழுநேரம்

ஆண்டு - 5, 6, 7, 8, 9, 10, 11-ம் வரை தனித்துவம் மிக்க ஆசிரியர்

தலைசிறந்த மாணவர்களை உருவாக்குகின்ற

நிறுவனம்

# NIRU TUITION CENTRE

## KONDAVIL

---




# எப்பொழுதும் எல்லோரதும்

## நம்பிக்கைக்குப் பாத்திரமானவை

தேசிக்காய் வாசனை கொண்ட

## எம்டீ சோப்

வகைகள்







எம்டீ என்ரபிறைஸ், அச்சுவேலி

தரமான உள்ளூர் உற்பத்திகளை ஆதரியுங்கள்

13/10/87

SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

வணிக அறிவியல் நிறுவனத்தின்
வெளியீடுகளாக விரைவில் மலரவுள்ள நூல்கள்

★ **வங்கியியல் சட்டங்களும் நடைமுறைகளும்**
T. ரகு A. I. B (Cey.)

...HY VINAYAGA... LI...RY
EARLALAI ... ST
CHUNNAKAM

★ **தேசிய வருமானம்**
மா. சின்னத்தம்பி B. A., B. Phil (Hons)


★ **பணமும் வங்கியியலும் - பாகங்கள் I & II**
கு. கல்வனீ சேயோன்

---

**மாணவ மணிகளே!**

'சிக்கனமே சிறந்த செல்வம்'

சம்பூரண சலவைக்கு நுரைவளம் கூடியது




# மில்க்வைற் நீலசோப்

வாங்கி உபயோகியுங்கள்

ஒரு கட்டி விலை ரூபா 2-50 சதம் மட்டுமே!

*100 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி அழகிய நூல் தொப்பியையும்;*
*25 மேலுறைகளுக்கு அப்பியாசக் கொப்பி ஒன்றையும்;*
*20 மேலுறைகளுக்கு மில்க்வைற் செய்தி ஒன்றையும்*

பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்

## மில்க்வைற் தொழிலகம் - யாழ்ப்பாணம்